உ

சிவமயம்

# அருள்ஒளி



மலர் 7

## சிவராத்திரி விரத சிறப்பு மலர்

மாசி மாத இதழ்

வெளியீடு:
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை,
இலங்கை.

2003




# ஆலய ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

செஞ்சொற்செல்வர்

திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2003 சித்திரபானு வருடம் மாசி மாதம்

வெளியீடு :

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் 7


## சிவராத்திரி விரத வழிபாட்டினை புனிதமாகப் பேணுவோம்

*சைவ சமயத்தவர்களின் முழுமுதற் தெய்வமான சிவனை நினைந்து உலகம் முழுவதும் வாழும் சைவசமயத்தவர்கள் புனிதமாக வழிபாடு செய்யும் உன்னத நாள்களில் சிவராத்திரி மகத்துவமானது. வடநாட்டுச் சைவர் காசியில் கூடி லிங்கோற்பவ கால வழிபாடு செய்து கங்கையில் நீராடி விரதம் நிறைவு செய்வர், தென்நாட்டிலும் சைவர்கள் பெருங் கோயிலில் தோறும் வழிபாடு செய்து விழித்திருந்து இறை வழிபாடு செய்வர். ஈழத்திலும் பஞ்ச ஈஸ்வர தலங்கள் முதல் ஏனைய தலங்களிலும் காலம் காலமாக சிவராத்திரி விழா பக்தி பூர்வமாக அநுட்டிக்கப்பட்டு வந்துள்ளது. கடந்த சில வருடங்களாக சிவராத்திரி விழாவின் மகிமையை விளங்கிக் கொள்ளாத சிலர் இவ் விழாநாளை அநாகரீகமாக கொண்டாடுவது வேதனைக்குரியது. சிலர் சிவராத்திரியில் திரைப்படங்களைப் பார்த்து பொழுது போக்குவதும், சிலர் சுற்றுலா மேற்கொள்வது போல் புனித தலங்களின் சூழலில் சென்று பக்தர்களுக்கு இடையூறு செய்வதும் மலிந்து கொண்டு இருக் கிறது. இந்நிலை முற்றாக மாறவேண்டும். மகா சிவராத்திரி நாளை மகிமை பேணும் நாளாக ஒவ்வொரு சைவசமயத்தவரும் கருத வேண்டும். சைவ ஆலயங்களின் அறங்காவலர்கள் ஆலயச்சூழலை அர்த்தமுள்ள சூழலாக என்றும் காப்பாற்ற முனைதல் வேண்டும். சைவப்*

பாரம்பரியங்களுக்கு இடையூறான நிகழ்ச்சிகளை சிவராத்திரி நாளில் கோயில்களில் அனுமதிக்காது பக்திக்குரிய பண்பாட்டினை உருவாக்க முற்படுதல் வேண்டும். பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் மன்றம் குறிஞ்சிக் குமரன் கோயிலில் மாலை ஆறு மணியில் இருந்து மறுநாள் காலை ஆறுமணி வரை தெய்வீக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அன்னதான ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது. இளைய தலைமுறையினர்க்கு பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம் முன் மாதிரியாகத் திகழ்கிறது. சிவராத்திரி நாளில் லிங்கப் பெருமானுக்கு வில்வம் சாத்தி பஞ்சாட்சர, மந்திரத்தை இடைவிடாது உச்சரிப்பவர்கள் கேட்கும் வரங்கள் கிடைப்பதோடு தீராத துன்பம் யாவும் அகன்று நல்வாழ்வு பெறுவர் என்பது எம்முன்னோரின் நம்பிக்கை. இலிங்கோற்பவ காலத்திலாவது வழிபாடு செய்தல் வேண்டும். சிவராத்திரி புராணம் என்ற ஒப்பற்ற உப புராணம் இவ்வுண்மையை மேலும் உணர வைக்கிறது. சிவராத்திரி புராணத்தை இந் நாளில் படித்துப் பயன் சொல்லும் மரபு அருகி விடாது காப்பாற்ற அனைவரும் பங்காற்ற வேண்டும்.

ஆசிரியர்

★ ★ ★

# கடவுள் எங்கே?

உங்களது சகோதர மக்களின் மீது உங்களுக்கு அன்பு உள்ளதா? கடவுளைத் தேட நீங்கள் எங்கே செல்ல வேண்டும் எல்லா ஏழைகளும் துயரப்படுவோரும் பலவீனரும் தெய்வங்களல்லவா? முதலில் அவரை வழிபட்டால் என்ன? கங்கைக் கரையிலும் கிணறு தோண்டச் செல்வதேன்? அன்பின் எல்லாம் வல்ல சக்தியில் நம்பிக்கை கொள்ளுங்கள் குப் என்று கிளம்பும் புகை போன்ற பகட்டான புகழ் மொழிகளைப் பொருட்படுத்துவார் யார்? உம்மிடம் அன்பு உள்ளதா? பின் நீர் எல்லாம் வல்லீர் ஆவீர். நீர் முற்றவும் தன்னலமற்ற தன்மையுடையீரா? உடையீராயின் நீர் எதிர்க்கவெண்ணாதவராவீர். ஒழுக்கமே எவ்விடத்தும் பயன்தருவது. பொறாமையையும் செருக்கையும் விட்டுவிடும். பிறர்க்காக ஒன்று சேர்ந்து உழைக்கக் கற்றுக் கொள்ளும். நமது நாடுக்குப் பெருந் தேவையாயுள்ளது இதுவே பொறுமையாயிரும் மரணம் வரை நன்றியோடிரும் உங்கட்குள்ளே சண்டை போடாதீர். பண விஷயங்களில் முற்றும் தூய்மையாயிரும் நம்பிக்கையும் நேர்மையும் பக்தியும் உம்மிடம் உள்ள வரை எல்லாம் முன்னேற்றமடையும் உங்கட்குள் பிளவுணர்ச்சி ஏற்படாதவரை இறையருளால் உமக்கு அபாயமில்லை என்று நான் உறுதி கூறுவேன். நிச்சயமாக நன்மை விளையும் என்று உணர்ந்தாலன்றி உமது மனதில் உள்ளதை வெளியிட வேண்டாம். மிகப் பெரும் வைரியாயினும் அவனிடத்தும் பிரியமான இதமான மொழிகளையே பேசுங்கள்.

உ

# மாசிமகப் பெருவிழா

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

"மடலார்ந்த தெங்கின் மயிலை ஆரமாசிக
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆடல் ஆனே றூரும் அடிகள் அடிபரவி
நடம் ஆடல் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்பது திருஞானசம்பந்தருடைய தேவாரத் திருப்பதிகமாகும். இப்பதிகத்தின் மூலம் மாசிமகம் எனப்படும் கடலாட்டு விழாவைப்பற்றி அறியக் கூடியதாக உள்ளது. தீர்த்த விழாக்களில் சிறந்ததாகக் கொள்ளப் படுவது மாசிமகப் பெருவிழாவேயாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருவதே மகாமகம் என்னும் தீர்த்தப் பெருவிழாவாகும். எனினும் ஆண்டுதோறும்வரும் மாசி மாதத்து மகநாளும் தீர்த்தப் பெருவிழாவுக்கு உரியதாகும். இவ்விழாவைச் சிறப்பாக 'கடலாட்டு' என்பர். இதனை திருஞானசம்பந்தர் பாடலும் 'மாசிமாத விழா கடலாட்டு விழா' எனக் குறிப்பிடுகின்றார். இக்கடலாட்டு பற்பல சந்தர்ப்பங்களில் இறைவனுக்கு நிகழ்வதாயினும் மாசி மாதத்து மகநாளே நீராட்டுக்கு மிகவும் சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது.

எமது உடம்பின் மாசினை நீக்குவது நீராகும். இதேபோன்று உயிரின் மாசாகிய பாவத்தைப் போக்கும் தெய்வத் தன்மை பொருந்தியதாக தீர்த்தத்தைக் கொள்ளலாம். தீர்த்தம் புறத்தூய்மை, அகத் தூய்மை என்னும் இரண்டையும் ஒருங்கே தருதலால் அவற்றில் நீராடிப் பயன்பெறுதல் மக்களின் இன்றியமையாத கடனாகும். இத்தீர்த்த நீராடல் பற்றிப் பலவகை நூல்களும் பேசுகின்றன. "மனத்தது மாசாக மாண்டார் நீராடி மறைந்தொழுகு மாந்தர் பலர்" என்று நீராடலின் சிறப்பைத் திருக்குறளும் அதாவது தவத்தால் மாண்புடைய வர்களே நீரில் மூழ்கி தம் மாட்சிமையால் மாண்புடையவர்கள் என்ற கருத்தைத் திருவள்ளுவர் மிகவும் அழகாகக் கூறியுள்ளமையை நோக்கலாம். "மாசற இமைக்கும் உருவினர்" எனத் திருமுருகாற்றுப்படையும் இந்நீராடலின் மகத்துவம் பற்றி எடுத்துக் கூறுகின்றது.

திருநாவுக்கரசு சுவாமிகள் இறைவனது திருவருள் திறனை "தீர்த்தநீர்" என்றே சிறப்பிக்கின்றார். "அத்தா உன்னடியேனை அன்பால் ஆர்த்தாய் - அருள்நோக்கில் தீர்த்த நீராட்டிக் கொண்டாய்"

என்பது அவரது தெளிந்த அனுபவமாகும். மாணிக்கவாச சுவாமிக ளும் தனது திருவாசகப் பதிகத்தில் 'ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்'' எனப் பாடுகின்றார். இதில் இறைவனையே தீர்த்தமாகக் கூறுகின்றார். இதன் மூலம் இறையருள் குளிர்மையைத் தந்து எம்மை மகிழ்ச்சியடையச் செய்யும் என்பதும் இறைவன் திருவருள் உயிர் வெம்மையாகிய பிறவி வெம்மையைப் போக்கும் என்பதும் இதனால் இறைவன் திருவருளில் மூழ்குவோர் மேலான மகிழ்ச்சியடைவர் என்பதும் பெறப்படும். இறைவனின் திருவருள் வடிவமாக இலங்கும் தீர்த்தங்களும் இம்மகிழ்ச்சியையே தரும் என்பது எமது நம்பிக்கை ஆகும். இதனாலேயே தீர்த்த யாத்திரை மிகவும் சிறப்பானதாகப் போற்றப்பட்டது. புராண, இதிகாசங்கள் இத்தீர்த்த யாத்திரை மகிமை பற்றி எடுத்தோதுவதை நாமறிவோம். இத்தீர்த்த யாத்திரை மூலம் பலவகையான தோசங்கள் நீங்கி வாழ்வில் மேம்பட்டவர்களை இந் நூல்கள் எடுத்தோதுகின்றன.

மகோற்சவ காலங்களின் பூர்த்தியில் ஆலயங்களில் இறைவன் தீர்த்த நீராடுவதும், மற்றும் சில சிறப்பு விழா நாட்களில் தீர்த்த நிலை களுக்கு எழுந்தருளி வந்து தீர்த்தம் வழங்குவதும் இத்தீர்த்தங்களின் சிறப்பை எமக்கு உணர்த்துகின்றன.

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய மாசிமகப் பெருவிழா எமது துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கடந்த பதினாறு ஆண்டுகளுக்கு மேலாக கொண்டாடப்பட்டு வருகின்றது. மாசிமகத்துக்கு முன்னுள்ள பத்து நாட்களும் எம்பெருமாட்டி துர்க்கை அம்பாளுக்கு இலட்சார்ச்சனை நடைபெற்று இறுதி நாளான மாசிமகத்தன்று விசேட பூசைகள், தீர்த்த மாடுதல், அபிஷேகம், ஸ்வர்ணபத்ம புஷ்பார்ச்சனை, திருவீதியுலா என்பன சிறப்பாக நடைபெறுகின்றன.

★ ★ ★

## கவியால்

மதியேயெல்லா மென்
றெண்ணியினு மாந்த யெனக்கு
விதியே யென்றுணர
வைத்த – விரத்துக் கதிபதியே!
கதியே யென்றுன்னைச்
சரணடைந்து -- பக்திக்கவியால்
துதிபாடித் தொழுகின்றேன்
துணை புரியாயோ ஸ்ரீ துர்க்கா!

இராம ஜெயபாலன்
கொக்குவில்



# நல்லைநகர் நாவலருக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சிலை

**30-01-2003 "வலம்புரி" பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்திலிருந்து ...**

*யாழ். இந்துக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் உருவச் சிலை இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஈழத்தில் சைவத்தையும், தமிழையும் தனது இரு கண்களெனப் போற்றியவர். அதற்காகத் தனது உடல் ஆவி முழுவதையும் அர்ப்பணித்தவர். ஈழத்தில் சைவமும் தமிழும் தழைத்து நிற்க காரண கர்த்தாவாக இருந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்பது மறுக்க முடியாத உண்மை. அவரின் தீர்க்க தரிசனமான அர்ப்பணிப்புக்களே ஈழத் தமிழர்களின் அறிவியல் வளர்ச்சிக்கு வித்திட்டது.*

*இலவசக் கல்வியின் தந்தை சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா எனக் கூறுபவர்கள் ஆறுமுகநாவலரின் கல்விப் பணியை அறியாதவர்களாகவே இருக்க முடியும்.*

*திண்ணைப் பள்ளிகளை அமைத்து கல்விப் பணி புரிந்த அவரின் சேவை அளவிடற்கரியது. அந்நியராட்சியின் அகோரமும், மதமாற்றமும் வேகமாகப் பரவிய காலத்தில் தனியொரு மனிதராக நின்று தமிழையும், சைவத்தையும் வளர்த்த அப்பெரியாரை பெருமைப்படுத்தி திருவாவடுதுறை ஆதீனம் அவருக்கு 'நாவலர்' என்னும் பெரும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது எனில், அது ஆறுமுகநாவலருக்கு கிடைத்த தனிப்பட்ட கௌரவமன்று. உண்மையில் ஈழத்தமிழருக்குக் கிடைத்த உயர்ந்த கௌரவம் என்பதை இன்றைய தலைமுறை மறந்துவிடலாகாது.*

*அத்தகைய பெரியாரின் உருவச் சிலை நல்லூர்க் கந்தனின் திருவாலய முகப்பில் கம்பீரமாகக் காட்சியளித்தது. ஆனால், ஆறுமுகநாவல பெருமையை அறியாதவர்கள், அங்கிருந்து அச்சிலையை அகற்றினர். அதன் காரணமாக தமிழ் அறிஞர்களும், சைவப் பெரியார்களும் வேதனைப்பட்டனர். குறிப்பாக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், சிவத்தமிழ் அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் மீண்டும் நல்லூர் முன்றிலில் நாவலரின் சிலையை நிறுவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். எனினும் இந்து சமயத்தில் துணிவுடைய இந்து இளைஞர்கள் இல்லாத காரணத்தினால் நாவலரின் பெருமையை உணராத இளம் சமுகத்தினால், பெரியவர்களின் ஆவலை நிறைவேற்ற முடியாது போயிற்று.*

எனினும் இன்று நாட்டின் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றான தமிழர்களின் கல்விக் குறிக்காட்டியின் ஓர் சின்னமாக இந்து சமயத்தின் பெயரை வானுயர்த்திக் காட்டும் சிகரங்களில் ஒன்றாக விளங்குகின்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நாவலருக்குச் சிலை எடுத்திருப்பது மகிழ்வுக்குரியது. பெருமைக்குரியது. தமிழர்கள் நன்றி மறந்தவர்களல்ல என்பதை நிரூபிப்பது அவ்வகையில் நாவலருக் சிலையெடுத்து யாழ். இந்துக் கல்லூரி தனக்கு மேலும் பெருமையை தேடிக் கொண்டது. இதற்கு உந்து சக்தியாக இருந்த ஆறு திருமுருகன் பாராட்டுக்குரியவர்.

நன்றி – "வலம்புரி பத்திரிகை"

★ ★ ★

## அருள் ஒளி தகவல் – களஞ்சியம்

* யாழ்ப்பாணத்து வடமராட்சிப் பிரிவில் வரலாற்றுப் பெருமை மிக்க கந்தவனக் கடவை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் 7-02-2003இல் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

* துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மாசிமக இலட்சார்ச்சனை விழா 7-02-2003 ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெற்று 17-02-2003 மாசிமகப் பெருவிழாவுடன் பூர்த்தி பெற்றுள்ளது.

* கொழும்பு ஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் 6-02-2003 வியாழக்கிழமை மிகச் சிறப்பாக நிறைவெய்தியது.

* தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 21ஆம் ஆண்டு நிறைவு விழா 9-03-2003 ஞாயிற்றுக்கிழமை தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

* மகா சிவராத்திரி விழா 1-03-2003இல் மிகச் சிறப்பாக நடைபெற வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானம், தேவாரப் பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற சிவாலயங்களில் பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.

* ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுக்கு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சிற்பக் கலைஞர் ரமணி அவர்களால் உருவாக்கப்பெற்ற நாவலர் சிலை 30-1-2003இல் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

* சிங்கப்பூர் செண்பக விநாயகர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் 7-02-2003இல் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

* காரைநகர் மணற்காடு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மாள் மகோற்சவம் 18-3-2003 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறும்.

உ

# குத்துவிளக்கு ஏற்றுதலின் மகத்துவம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், M. A. அவர்கள்

சைவமக்கள் ஒளியை இறைவனாக வழிபடுபவர்கள். சிவனை, ''சொற்றுணை வேதியன், சோதி வானவன்'', ஆகத்தரிசிப்பவர்கள். ஒளியானது இருளை அகற்றுகிறது. அத்துடன் எல்லாப் பொருள்களையும் வெளிப்படையாகக் காட்டுகிறது. சூரியன், சந்திரன், அக்கினி என்பன, முச்சுடர்கள், அவை ஒளியைத் தந்து உயிர்களை வாழ்விப்பவை. எனவே, அவற்றையும் கடவுளராக வழிபாடு செய்கின்றோம். நல்லன செய்யும் அனைத்தும் தெய்வாம்சம் பொருந்தியவை. ஆகவே, அவை வணக்கத் திற்குரியவை. ஒளி, நன்மை பயப்பதால், வழிபாட்டிற்கும் வணக்கத்திற்கும் உரியது ஆகின்றது.

சைவர்கள், காலையிலும மாலையிலும் வீட்டில் விளக்கேற்றி வழிபாடு செய்யும் வழக்கத்தை உடையவர்கள் மகாலட்சுமி எல்லாவிதசெல்வங்களையும் எமக்கு வழங்குபவள், ''பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்கிறது வள்ளுவர் மறை. இம்மை வாழ்வில் இன்பம் அடைவதற்குப் பொருட் செல்வம் தேவை என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். செல்வத்திற்கு அதிபதியாகிய மகாலட்சுமியை குத்து விளக்கில் தரிசிக்கிறோம்.

குத்துவிளக்கினை ஏற்றியபின், அதனை ஊடுபெற்றவிடுதல் கூடாது. ஊடுபெற்றுதல் என்பது எண்ணெய் இல்லாமல் திரி காய்ந்து எரிதலும் புகைத்தலும் ஆகும். குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கும் போது சிலர் வாயினால் ஊதி அணைப்பதைக் காண்கிறோம். அவ்வாறு செய்தல் தவறாகும். எந்தத் தீபத்தையும் வாயினால் ஊதி அணைத்தல் ஆகாது.

வைபவங்களைத் தொடங்கும் போது குத்துவிளக்கு ஏற்றி வைக்கும் வழக்கம் சைவமக்களிடையே காணப்படுகிறது. இது தொன்று தொட்டு இருந்து வரும் மரபு ஆகும். சமய விழாக்கள், கிரியைகள், சடங்குகள் என்பவற்றை நடத்தத் தொடங்கும் போதும் சரி, சமூக விழாக்கள், நிகழ்ச்சிகள், வைபவங்கள் என்பவற்றை ஆரம்பிக்கும் போதும் சரி, குத்துவிளக்கு முதலில் ஏற்றப்படுகிறது. அதற்குப் பூசை, வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. சூரிய ஒளிகிடைக்கும் பகல் நேரத்திலுங்கூட குத்துவிளக்கு ஏற்றப்படுகிறது.

குத்துவிளக்கு எரியும் போது, சுடர்பட்டு மலர்கள் எரிந்து கருகுவதையும் காண்கிறோம். அந்தநிலை ஏற்பட

விடக்கூடாது. ஆகையால், மலர் மாலைகள் விளக்குச் சுடர்படாதவாறு சூட்டப்படுதல் வேண்டும். குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்ளக் கூடாதல்லவா?

நாட்காரியங்கள் செய்யத்தொடங்கும் போதும், திறப்பு விழாக்கள், கலை விழாக்கள், மங்கல நிகழ்வுகளை நடாத்த ஆரம்பிக்கும் போதும் குத்துவிளக்கு ஏற்றப்படுவது ஏன்? என்று பலர் வினா எழுப்புகிறார்கள். மரபு, சம்பிரதாயம், பாரம்பரியம் யாவும் காரணத்துடன்தான் தோன்றியிருக்க வேண்டும்.

ஒளி, அறிவை உணர்த்தும் சின்னம், இறைவன் பேரறிவாளன், அறிவின் ஊற்று இறைவனே. எல்லாவித அறிவிற்கும் மூலதத்துவமாக விளங்கும் இறைவனை, ஒளிமயமாக வழிபட்டுக்கருமங்களை ஆரம்பிக்கிறோம். இறைவனை முன்வைத்து ஆற்றுங் கருமங்கள் நீதியாக அமையும்; அதனால் வெற்றிபெறுகின்றன.

ஒளி இருளை அகற்றும்; அறிவொளி அறியாமையை நீக்கும். அறியாமை அகன்று விட்டால், நாம் எடுத்த கருமங்களுக்குக் குறுக்கே அறியாமையால் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகள், இடையூறுகள் அகற்றப்பட்டு விடும். அறிவொளியின் துணையால் எல்லாக் காரியங்களும் இனிது நிறைவேறும், இதனை உணர்த்தவே குத்து விளக்கு ஏற்றப்படுகிறது. இறைவனை விசாரித்துக் காரியத்தைத் தொடங்கு; உணர்ச்சி வயப்படாமல், அறிவுவயப்பட்டு, அறிவின் வழிகாட்டலில் கருமங்களைச் செய் என்னுங் கருத்துக்கள் தொனிக்கின்றன. விளக்குத்திரி தன்னை எரித்து, உலகிற்கு ஒளியூட்டுகிறது. தியாகமும் தன்னலமின்மையும் இங்கு உணர்த்தப்படுகிறது. ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற அப்பர் வாக்கையும்; ''பணிபுரி பலனை எதிர்பாராதே'' என்ற பகவத் கீதை மகுடவாசகத்தையும், குத்துவிளக்கேற்றுதல், கருமத்தின் ஆரம்பத்திலேயே நமக்கு உணர்த்துவதாக அமைகின்றது.

விளக்குச் சுடர் எப்போதும் மேல் நோக்கியதாகவே உள்ளது. அது போன்று எமது எண்ணங்கள், பேச்சுக்கள், செயல்கள் யாவும் மேல் நோக்கியனவாயும், உயர்ந்தனவாயும் இருத்தல் வேண்டும். ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகள் ஏற்றப்படலாம். குத்துவிளக்கு ஏற்றல் ஆனது நமக்குப் பல ஆன்மிக, உலகியல் உண்மைகளை உணர்த்துகிறது என்பதைத் தெரிந்துகொள்வோம். ''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''

---

உங்கள் அபிமான 'அருள் ஒளி' கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்
கோவில் வீதி
நல்லூர்.

# குருவும் தலைமைச் சீடரும்

அமரர் "எல்லார்வி"
தமிழ்நாடு

(சென்ற இதழ் தொடர்ச்சி ... ...)

உடனே ஒருவர் அருகே உள்ள மணம்பூண்டிக்கு விரைந்து மேளத்தை அழைத்து வந்தார்.

''பிள்ளையார் பூஜையை ஆரம்பிக்கலாமா?'' என்று ஸ்வாமியைக் கேட்ட பொழுது, ''ரோஜாமாலை ஆறு வேண்டும். வந்தால்தான் கிரு கப்பிரவேசம்!'' என்று சொல்லி விட்டார்.

திடீரென்று ஆறு மாலைகளுக்கு எங்கே போவது? கோயிலில் ஸ்வாமிக்குச் சாத்தி இருப்பவற்றை எடுத்துச் கொள்ளலாமா என்று யாராவது பேசி அது ஸ்வாமியின் செவிக்கு எட்டிற்றோ என்னவோ, ''நிர்மால்யம் கூடாது!'' என்றும் சொல்லி விட்டார்.

திருவண்ணாமலை போய் வரவும் நேரமில்லை 'என்ன செய் வது?' என்று எல்லாரும் திகைப்பதைக் கண்ட ஸ்வாமி, 'உங்களால் முடியவில்லையா? ஸ்வாமியே வரவழைக்கிறேன்'' என்று சொல்லித் திருக்கோயிலூர் பக்கம் கைகாட்டினார்.

சிறிது நேரத்தில் கார் ஒன்று வந்து அங்கே நின்றது பம்பாய் ஸ்ரீ ஞானானந்த மண்டலியின் தலைவர் ஸ்ரீ ராஜா சென்னை வழக்கறி ஞர் ஸ்ரீ கிருஷ்ணசாமி, சென்னை மயிலாப்பூர் இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ் உரிமையாளர் ஸ்ரீராம். ஸ்ரீ அனந்தராமன் நால்வரும் காரிலி ருந்து இறங்கினர். அவர்களிடம் ஆறு ரோஜாமாலைகள் இருந்தன. ஸ்வாமி, ''பூரண கும்பம் எங்கே?'' என்று மீண்டும் ஒருமுறை கர்ஜித் தார். உடனே குருக்கள் பூரண கும்பத்துடன் ஓடோடி வந்தார்.

ஸ்வாமி ரோஜாமாலைகளை எடுத்தார். காரைக்குடி ஸ்ரீ சுப்பையா அம்பலம் அவர்களிடம் ஒன்று. கோவை ஸ்ரீ சிங்காரம் செட்டியார் அவர் களிடம் ஒன்று. ஸ்ரீவடிவேலு உடையார் அவர்களிடம் ஒன்று ஸ்ரீ ரெட்டியார் அவர்களிடம் ஒன்று ஸ்ரீ ராம்பாக்கம் ரெட்டியார் அவர்க ளிடம் ஒன்றுமாக ஐந்து மாலைகளைக் கொடுத்தார். உட்புறத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த குருஜி அவர்கள், மீதி உள்ள ஒன்றை நம் மிடம் கொடுப்பார் என்று நினைத்தார். ஆனால் ஸ்வாமியே, அதைத் தம்மிடமே வைத்துக்கொண்டார். இரைந்த குரலில், ''எங்கே நம் தாஸர்?'' என்று கூப்பிட்டார். குருஜி உள்ளே இருந்து ஓடி வந்தார்.

ஸ்வாமி, உடனே தம் கையிலிருந்த மாலையை, குருஜி அவர் களுக்குப் போட்டார். பிறகு மற்றவர்களுக்குப் போட்டார். மற்ற வர்களைப் பார்த்து, ''ம்! போடுங்கள் எல்லாரும் [illegible] நம் தாஸ

ருக்குப் போடுங்கள் என்றார். ஐந்து மாலைகளைக் கரங்களில் தாங்கியிருந்த மற்ற ஐவரும் மாலைகளைக் குருஜி அவர்களுக்குச் சூட்டினார்கள். அப்போது குருஜி அவர்களுக்குக் கை கால்கள் உதறல் எடுத்தன.

ஸ்வாமி, உடனே அங்கே நின்றிருந்த பரமபக்தரும் புகைப்பட நிபுணருமான முகில் அவர்களைப் பார்த்து, ''என்ன முகில்! ஃபோட்டோ எடு! விழுப்புரம் ஸ்டுடியோ வடிவேலு இருக்கிறாரா? சினிமாவாகவே எடுக்க சொல்! பின்னால் யாராவது மறுத்தாலும் இது காட்டிக் கொடுத்து விடும்!'' என்று சொல்லி, குருஜி அவர்களின் கையைப் பிடித்துக் கட்டிடத்தை சுற்றி வலமாக அழைத்துச் சென்றார்.

கோயிலின் பின்புறம் சென்ற போது மயில் ஒன்று வந்து அங்கே நின்றது. உடனே சுப்பையா அம்பலம் அவர்கள் உணர்ச்சி மேலீட்டால் கதற ஆரம்பித்தார். ஸ்வாமி ''அமைதி! அமைதி!'' என்று சாந்தப்படுத்தினார். பிறகு கோயிலைச் சுற்றி வந்து எல்லா சந்நிதிகளிலும் தீபாராதனை செய்யச் சொல்லித் தீர்த்தம் கொடுத்தார். பின்னர் 'தாஸரைக் கொண்டு போய் அறையிலே விட்டுவிட்டு வாருங்கள்' என்றார்.

குருஜி அவர்களுக்கு உள்ளூற, சந்தேகம் ஒன்று ஞானேஸ்வரர் சரித்திரத்தில் விட்டல்பந்தின் மனைவி. அவர் சந்நியாசம் வாங்கிய பிறகு வீதியிலே நாமசங்கீர்த்தனம் செய்து கொண்டு வந்த யோகிக்கு நமஸ்காரம் செய்தாள். உடனே அவர் 'ஸத்புத்திரப்பிராப்தி ரஸ்து!' என்று ஆசீர் வதித்தார். 'துறவியின் மனைவிக்கு ஸத்புத்திரப்பிராப்தியா?' என்று அந்த அம்மாள் கலக்கத்தோடு அதைப்பற்றிக் கேட்டதற்கு, அவர், 'நடக்கும்' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார். அந்த அம்பாளுக்குத் தெரியாது. தன்னுடைய கணவர் அவருடைய சீடர் என்பது. பின்னர் யோகிதாம் தங்கியிருக்கும் இடத்தை அடைந்து, விட்டல்பந்தை அழைத்து 'காஷாயத்தைக் களைந்துவிட்டுக் குடும்பம் நடத்து' என்றார். குரு வாக்குக்கு மறு வாக்கில்லை என்றபடி விட்டல்பந்த் தம் இல்லம் திரும்பி இல்லறத்தில் ஈடுபட்டார்.

இந்த ஞாபகம் குருஜி அவர்களை அலைக்கழித்தது. ஸ்வாமி நமக்குக் கல்யாணம் செய்து வைத்துவிடுவாரோ' என்று பயந்தார்.

குருஜி அவர்களுக்கு 1950 முதலே ஸ்வாமியிடம் ஈடுபாடு உண்டு. என்றாலும் 1960 முதல் 'நீயே கதி!' என்று ஸ்வாமியிடம் அடைக்கலம் ஆகிவிட்டவர். அவரிடம் அளவு கடந்த பக்தி உடையவர். நாள்தோறும் ஸ்வாமி உண்ட பின் அவருடைய உச்சிஷ்டத்தை உண்பவர். அவர் குளிக்கும் நீரை அள்ளி அள்ளிப் பருகுபவர். பல சமயங்களில் ஸ்வாமி 'தாஸர் பட்டினி இருப்பார் சீக்கிரம் சாப்பாடு போடு' என்று கேட்டு வாங்கிச் சாப்பிட்டு விட்டு மீகுதியாக இருக்கும் உச்சிஷ்டத்தை அவருக்குக் கொடுப்பார். அவரும் பேரானந்தத்தோடு அதனை உண்பார். 'இப்படிப் பட்ட என்னை ஸ்வாமி இல்லறச் சிக்கலில் மாட்டி வைப்பாரா? ஒரு போதும் அவ்வாறு செய்யமாட்டார்' — இவ்வாறு என்ன என்னவோ தம்மைத் தாமே தேற்றிக் கொண்டார் குருஜி.

பிற்பகல் மூன்று மணி இருக்கும் குருஜி ஸ்நானம் செய்து வீட்டுக் கோயிலுக்கு வந்தார். அப்போது ஸ்வாமி அங்கே அமர்ந்திருந்தார். அவருக்கு நமஸ்காரம் செய்த குருஜி சற்றுத் தள்ளி மிகவும் பவ்யமாக நின்றார். அங்கே இருந்த பம்பாய் ராஜ அவர்கள் குருஜியை அணுகி, மென்மையானக் குரலில், 'ஸ்வாமி உங்களுக்கு மகுடாபிஷேகம் செய்வது போல் கனவு கண்டேன். ஆறு மாலைகளுடன் உடனே வரும்படி கனவிலே ஸ்வாமி கட்டளையிட்டார். உடனே அனந்தராமனை அழைத்துக் கொண்டு பம்பாயிலிருந்து சென்னை வந்து கிருஷ்ணசாமி, ஸ்ரீராம் இவர் இங்கு வந்தேன்'' என்றார்.

அன்னை மண்டபத்தில் ஸ்வாமி வசந்தி எனும் பக்தையை அழைத்து 'வெள்ளிப்பாதுகை கொண்டு வா' என்றார். பிறகு அபிஷேக சாமான்கள் கொண்டுவரச் சொன்னார். $1\frac{1}{2}$அடி உயரம் உள்ள ஆதிசங்கரர் பீடத்தை எடுத்து வரச் சொன்னார்.

தற்செயலாக அன்று காலையில் குருஜி வபனம் செய்து கொண்டிருந்தார். ஸ்வாமி கேட்டவை அனைத்தும் வந்தபின், 'வஸ்திரம் கொண்டு வா' என்றார். பொன்னாடை ஒன்றைக் கொண்டு வந்தார்கள். ஸ்வாமி, 'வஸ்திரம் என்றால் காஷயம் என்று தெரியவில்லையே!'' என்று சொல்லி விட்டு, 'சரி ராஜாங்கமாகவே இருக்கட்டும்!' என்று சொல்லி அதை, குருஜி அவர்களுக்குப் போத்தினார்.

பின்னர் ஸ்வாமியே பாதபூஜை செய்தார். பிறகு குருஜியைப் பீடத்தில் உட்காரச் சொன்னார். அவருக்குக் கூச்சமாக இருந்தது. ஸ்வாமி கீழே இருப்பதைப் பார்த்தார். உயர்ந்த ஆசனத்தில் உட்காரத் தயங்கினார். ஸ்வாமி, 'அங்கும் இங்கும் எல்லாம் ஒன்றுதான் உட்கார்'' என்றார். அதன்பிறகு குருஜி உட்கார்ந்தார்.

நிர்க்குணாஷ்டகம் அர்ச்சனை செய்தார். பிறகு, 'தாஸர் ஆஞ்சநேய அம்சம்' என்று சொல்லி ஆஞ்சநேய அஷ்டோதரம் படிக்கச் சொன்னார். பாதுகையில் இருந்த மலர்களை ஒவ்வொன்றாக எடுத்து எடுத்து, குருஜி அவர்களின் சிரசில் போட்டுத் தாமே அர்ச்சனை செய்தார். அது முடிந்த பின், அவரைத் தடவிக் கொடுத்தார், சூழ இருந்தவர்களைப் பார்த்து, 'தாஸருக்கு இளவரசுப்பட்டம் கட்டிவிட்டேன், மதி உள்ளவர்கள் இதனைப் புரிந்து கொள்ளட்டும்' என்றார். பிறகுஸ்வாமி தம் அறைக்குப் போய் விட்டார். அங்கே இருந்தவர்கள் குருஜி அவர்களை வணங்கினார்கள்.

குருஜி தம் அறையை நோக்கிச் செல்லும் வழியில் மற்றொரு பக்தையான கௌரி அவரை அணுகினார். 'ஸ்வாமி சமாதியாகப் போகிறேன் என்றார்' என்று சொல்லி விம்மி விம்மி அழுதாள். இதைக் கேட்டுப் பதற்றமடைந்த குருஜி ஸ்வாமி தேடி ஓடினார். ஸ்வாமி அப்போது அறையில் உள்தாள் போட்டுக் கொண்டு ஓய்வில் இருந்தார். அதன் பின்னர் அன்று முழுவதும் குருஜி அவர்களுக்கு ஸ்வாமிகள் சந்திப்புக் கிட்டவேயில்லை. இரவெல்லாம் அவர் தூங்கவும் இல்லை.

(மிகுதி அடுத்த இதழில் தொடரும் ... ...)

# நைவேத்தியம் ஏன்?

திரு. சாந்த் கேசவதாஸ் அவர்கள்

ஆண்டவனுக்கு விதம் விதமான உணவு வகைகளை வைத்து நைவேத்தியம் செய்வது ஏன்? அது ஏழை மக்களின் பசியைத் தீர்க்குமா? இறைவனுக்குப் படைத்த உணவை நாம் பிரசாதமாக ஏற்று உண்பது ஏன்? அதன் தத்துவம் என்ன?

மகாபாரதத்தில் இந்தக் கதை வருகிறது. பாண்டவர்கள் துர்வாச முனிவரின் கோபத்துக்கு ஆளாகி சாபம் பெற வேண்டும் என்பதற்காக துரியோதனன் அவரை ஆயிரம் சீடர்களான யோகிகளுடனும் பாண்டவர் வனவாசம் செய்யும் எளிய ஆச்சிரமத்துக்கு நண்பகல் வேளையில் அனுப்பி வைக்கிறான். எல்லோரும் நல்லபசியுடன் வந்து சேருகிறார்கள். திரௌபதியிடம் ஓர் அமுதசுரபி உண்டு. அதில் எடுக்க எடுக்க உணவு வந்து கொண்டே இருக்கும். ஆனால் அதிதிகள் எல்லோருக்கும் உணவளித்துபின் பாண்டவர்களும் திரௌபதியும் உணவருந்தி முடித்து அதை முடிவைத்து விடுவார்கள். அப்புறம் அது உணவு தராது. அன்று அதைப் போல முடிவைத்தாகி விட்டது. அதன் பின் துர்வாச முனிவரும், ஆயிரம் யோகிகளும் வந்து சேர்ந்தார்கள்.

தருமர் அவர்களை வரவேற்றார் நதியில் நீராடித் திரும்பும் படியும் அதற்குள் உணவு தயாரித்து வைப்பதாகவும்சொல்லி அனுப்பி வைத்தார். அவர்கள் நீராடப் போய்விட்டார்கள் உணவுக்கு எங்கே போவது? கவலையுடன் உள்ளே போய் கிருஷ்ணபகவானை நினைத்துப் பிரார்த்தனை செய்தாள். சிலநொடிகளில் கிருஷ்ண பகவான் அந்த ஆசிரமத்துக்கு வந்துவிட்டார். கிருஷ்ணரோ அவளைப் பார்த்து அம்மா நான் மிகுந்த பசியுடன் நெடுந்தூரத்திலிருந்து வந்திருக்கிறேன். எனக்கு உடனே ஏதாவது உணவுகொடு என்று கேட்டு விட்டார்.

திரௌபதி கண்கலங்கிப் போனாள். கண்ணா இங்கே வந்திருக்கும் ஆயிரம் யோகியருக்கு எப்படி உணவளிப்பது என்று நான் கலங்கிப் போய் உன்னை உதவிக்கு அழைத்தேன் நீயோ உனக்கே பசி என்று என்னிடம் உதவி கேட்கிறாய் எனக்கு ஒன்றும் புரியவில்லை. நானே சாப்பிட்டு முடித்தாகி விட்டது. உணவுக்கு நான் எங்கே போவேன் என்று கண்ணீர் ததும்பச் சொன்னாள் திரௌபதி.

கிருஷ்ணர் சிரித்துக் கொண்டே அப்படி இராது நீ அமுதசுரபியைக் கொண்டு வா நான் பார்த்துக்கொள்கிறேன் நிச்சயமாக ஏதாவது உணவு மிச்சம் இருக்கும் என்று கேட்டார் திரௌபதி கொண்டு வந்து காட்டிய காலி பாத்திரத்தின் உள்ளே பார்த்தார். ஒரு கீரை இலை அங்கு ஒட்டிக் கொண்டிருந்தது. அதை எடுத்து வாயிலே போட்டுக் கொண்டு திரௌபதி எனக்கு வயிறு நிறைந்து விட்டது.

இனி உனக்குக் கவலை இல்லை என்று சொல்லி விட்டுப் போய் விட்டார் திரௌபதிக்கு ஒன்றும் புரியவில்லை.

வெளியே வந்த திரௌபதிக்கு நீராடிவிட்டுத் திரும்பிய துர்வாச முனிவரும் ஆயிரம் யோகியரும் ஆசி கூறினார்கள். அம்மா நாங்கள் நீராடத்தான் போனோம். ஆனால் ஏனோ தெரியவில்லை எங்கள் வயிறு முழுமையாக நிறைந்து விட்டது. அங்கே நீர் அருந்தக்கூட இடம் இல்லை. எல்லாவற்றுக்கும் உன்னுடைய நல்ல உள்ளம் தான் காரணம் போலிருக்கிறது என்று சொல்லிக் கொண்டு போய்விட்டனர். திரௌபதிக்கு எல்லாம் புரிந்தது. ஆண்டவனுக்குக் கொடுத்த சொற்ப உணவை அத்தனை பேரும் உணர்ந்து வயிறு நிறையப் பெற்றார்கள் என்பது பாரதக் கதையின் தத்துவம்.

இறைவனுக்கு உணவு படைப்பதும் அதைப் பிரசாதமாக நாம் ஏற்பதுவும் இதே தத்துவத்தைத்தான் விளக்குகிறது. பெரிய மரம் இருக்கிறது. அதில் ஆயிரக்கணக்கான இலைகள் இருக்கின்றன. அடி மரத்தின் வேருக்குத்தான் தண்ணீர் ஊற்றுகின்றோம். ஆனால் அது மரத்தின் அவ்வளவு இலைகளுக்கும் போய்ச் சேர்ந்து விடுகிறது. ஆண்டவனிடம் பக்தி சிரத்தையுடன் நாம் அளிப்பது எதுவும் உலக நன்மைக்கு அனைவருக்குமே பயன்படும் என்பதே நாம் தெரிந்து கொள்ள வேண்டியது.

---

# ஆத்மா எங்கே?

ஆத்மா என்பது எங்கே இருக்கிறது? ஆத்மா அழிவில்லாதது என்று கூறுகிறார்கள். அப்படியானால் அழியக் கூடிய உடம்பில் அது எங்கே இருக்கிறது? உடல் அழிந்தபின் அது எங்கே போகிறது?

ஆத்மா பிறப்பதோ உடம்பில் இறப்பதோ இல்லை. அதனால் அது அழிவு இல்லாதது. ஒரு பூ தோன்றுகிறது பிறகு அது மலர்ச்சி பெறுகிறது. பிறகு வாடுகிறது. கடைசியில் உதிருகிறது. இதுவே நமது உடலுக்கும் பொருந்தும். அதிலும் தோற்றம், வளர்ச்சி, வாட்டம், முடிவு எல்லாமே உண்டு. ஆகவே பிறப்பு, இறப்பு என்ற இரண்டு எல்லைகளுக்கிடையே மாற்றம் உண்டாகக்கூடிய எதுவும் அழியக்கூடியது தான். இந்த இரண்டு எல்லைகளுமே இல்லை என்றால் மாற்றமும் கிடையாது: அது அழிவில்லாதது: இந்த அடிப்படையில் உடல் அழியக்கூடியது ஆத்மா அழிவில்லாதது.

குயவன் பானையைச் செய்கிறான் அப்போது பானை உருவெடுக்கிறது. உள்ளே காற்றும் நிறைந்து இருக்கிறது. பானைக்கு வெளியேயும் காற்று இருக்கிறது. பானை உண்டான பிறகு காற்று உள்ளே நிறைந்தது. ஆனால் அதைக் குயவன் உண்டாக்கவில்லை. பானை உடையலாம். ஆனால் உள்ளே உள்ள காற்று அழிவதில்லை. பானைக்குள்ளே இருந்த காற்று பானைக்கு வெளியில் உள்ள காற்று வெளியுடன் கலந்து விடுகிறது. பானை உருவாகி மறைகிறது ஆனால் அதனுள்ளே இருக்கும் காற்று உருவாவதும் இல்லை மறைவதும் இல்லை.

ஆத்மா நமது அழியக்கூடிய உடம்பினுள் இருக்கும் அழியாத உண்மை. அது நம்முடைய உடம்புக்கு உள்ளேயும் வெளியேயும் முன்னும் பின்னும் தொடர்ந்து இருக்கிறது. பானைக்கு உள்ளேயும் வெளியேயும் அது தோன்றுவதற்கு முன்பும் பின்பும் தொடர்ந்து இருக்கும் காற்றைப்போல.

சுவாமி சின்மயானந்தா
( கீத ஞானயக்ஞ உரையிலிருந்து )

உ

# திருமுறைகள்

சொ. கிருஷ்ணன்
திருச்சி

**திருமுறை விளக்கம் :**

திருமுறைகள் இசை மயமாய் அமைந்த இன்பத் தமிழ்ப்பாடல்கள்; சிவபரம்பொருளின் திருப்புகழைக் கூறும் அருட்பாடல்கள்; ஆளுடைய பிள்ளையார் முதல் அருள்மொழித் தேவர் ஈறாகவுள்ள உண்மை நாயன்மார்களால் காதலாகி கசிந்து கண்ணீர் மல்க ஓதப்பெற்ற பக்திப் பாடல்கள். அவை பக்தர்களுக்கு மட்டும் அமைந்தவையல்ல. தமிழ்விரும்புவோர், இசை பயில்வோர் யாவரும் போற்றிப் புகழவேண்டிய திருப்பாடல்களுமாகும். மறுமைக்கு வழிகாட்டுவதோடு இம்மைக்கு வேண்டும் சோறுங் கூறையுந் தந்து நல்வாழ்வு வாழச் செய்ய வல்லவையுந்திருமுறைகளே. இவை நமக்கு ஆண்டவன் திருவருளால் அருளப்பெற்ற அரும்பெறற் செல்வம். சைவ சமயத்தின் உயிர் நிலை. சுருங்கக்கூறின், எல்லாநலன்களையுந் தன்னகத்தே கொண்டு மிளிர்வதோர் ஒப்பற்ற முழுநூல் திருமுறைகள்.

**திருமுறைகள் மந்திரங்களே :**

திருமுறைகள் 'தமிழ்வேதம்' என்று அழைக்கப்பட்டு வருவதை யாவரும் அறிவர். 'திருத்தோணி மிசை மேவினார்கள் தங்கள் திருமுன்பு தாழ்ந்தெழுந்து தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார்'' என்று இதனைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவார். வடமொழி வேதம் எழுதா மறை; திருமுறைகளாகிய தமிழ்மறை எழுதும் மறை. ''மறை முதல் மெய்யுடன் எடுத்த எழுதும் மறை'' என்று சேக்கிழார் பேசுவதைப் பெரிய புராணத்தில் காண்க.

திருமுறைகள், ஞானசம்பந்தாதியார்களால் பாடப்பெற்றனவே எனினும் அவைகள் அனைத்தும் இறைவன் தன் அருள்வாக்குகளேயாகும். வேத சிவாகமங்களை அருளிச்செய்த சிவ பரம்பொருளே இவ்வருளாளர்பால் அதிட்டித்து நின்று இத்திருமுறைகளைப் பாடியருளினார் என்றே கொள்ளவேண்டும். பேயினாற் பீடிக்கப்பட்டவனது வாய்ச்சொற்கள் ஆகா. அதுவே போன்று சீவபோதமிழந்து சிவமான தன்மையெய்திய அருள்ஞானச் செல்வர்களாகிய நம் நாயன்மார்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத்திருமுறைகள் அனைத்தும் சிவபெருமானின் அருள்வாக்குகளேயன்றி இவர்களின் வாக்குகள் அல்ல என்பது இனிது புலப்படும். இக்கருத்தை, ''எனதுரை தனதுரையாக

நீறணிந்து ஏறு தந்து ஏறிய நிமலன்'' என வரும் ஞானசம்பந்தர் தேவாரத்தில் கண்டுகொள்க.

சிவபெருமானுக்குத் தூல சரீரம் மந்திரம்; சூக்கும சரீரம் ஆன்மா; அதிசூக்கும சரீரம் சிவசக்தி; என்று இவ்வாறு சிவாகமங்கள் கூறும் சிவபிரானுக்குரிய மூன்று சரீரங்களுள் தூல சரீரமாகத் திகழ்வது திருமுறைகள் எனலாம். நம்பியாண்டவர் நம்பிகள் தேவாரம் முதலியவற்றை, மந்திரங்கள் பதினொரு பகுதியன வாதல் பற்றி பதினொரு திருமுறைகளாகவும், அவற்றுள் தேவாரங்களைச் சப்தகோடி மகாமந்திரப்பகுப்புப் பற்றி ஏழு திருமுறைகளாகவும் வகுத்தருளியது, திருமுறைகள் சிவபெருமானுக்கு தூலசரீரமாகியமந்திரமாதல் தன்மை கருதியே. இவை அத்தன்மையவாதல்.

மந்திரங்கள் எழுகோடி யாதலினான் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக வெடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினால்
அந்த முறை நான்கினொடு முறைபதி னொன்றாக்கினார்

என்றும் திருமுறை கண்ட புராணத்தால் நன்கு தெரியப்படும்.

இன்னும் 'மந்திரம்' என்பதற்கு இலக்கணம் கண்ட ஒல்காப்புகழ்த் தொல்காப்பியனார், ''நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த, மறைமொழி தானே மந்திரமென்ப'' என்று கூறியருளினார். உலகப்பொதுமறை தந்த வள்ளுவரும் நிறைமொழி மாந்தர் தம்வாய்மொழிகளே மறைமொழி என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். ''அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் மொழியே நிறைமொழி'' என வரையறுத்துள்ளார் ஆசிரியர் பரிமேலழகரும். நமது திருமுறைகளும் இவர்கள் கண்ட இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்வதைக் காண்க. திருமுறைகள் என்றும் அழியாத் தன்மையவானதால் 1400 ஆண்டுகளுக்கு முன் பாண்டியனுக்கு வெப்பு நோய் தீர்க்கப்பாடியருளிய ''மந்திரமாவது நீறு'' என்ற திருப்பதிகம் இன்றும் வெப்புநோய் தீர்த்து வருவதை நாம் காண்கிறோம். தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலையுண்ட பாலனை அழைத்ததும் மறைக்கதவினைத் திறந்ததும், எலும்பைப் பெண்ணாக்கியதும் எல்லாம் திருமுறைகளே. இவையாவும் அருளிக்கூறிய காலத்து அவ்வாறே நிகழ்ந்த அற்புதச் செயல்கள். வெகுண்டு கூறிய காலத்தும் அவ்வாறே பயன் தந்து நின்றதற்கு ஓர் எடுத்துக்காட்டு. 'அத்திரமாவன அஞ்செழுத்துமே' என்ற திருவாக்கால் இடி விழச் செய்த அற்புதமாகும். எனவே மேற்கூறிப் போந்த சிலவற்றால் திருமுறைகளும் மந்திரங்களே என்பது தெளிவு.

## திருமுறைகளில் ஆண்டவனுக்குள்ள ஆசை:

திருமுறைகளைக் கேட்பதில் ஆண்டவனுக்கு அளவு கடந்த இன்பம். ''தேவாரம்'' என்ற சொல்லிற்கு ''சிவபிரானுக்கு இன்பை விளைவிப்பது'' என்றும் ஓர் பொருள் உண்டு தேவாரத்தினிடத்தும் அதனை ஓதுவாரிடத்தும் ஆண்டவன் அளவுகடந்த அன்புடையவனாக இருப்பான் என்

பது இதன் கருத்து. திருமறைக்காட்டில் ஞானசம்பந்தப்பிள்ளையார்க்கு ஆண்டவன் படிக்காசு வழங்கினான். அவ்வாறு ஆண்டவன் காசு நித்தம் நல்கியது யாதுகாரணம் பற்றியென்னின், ''தமிழ் கேட்கும்'' இச்சையாலேயே என்று ஞானசம்பந்தர் நமக்கு நவிற்றுகின்றார். இதுமட்டுமா? தேவாரத் தீந்தமிழைக் கேட்கும் இச்சையால் ஆண்டவன் இன்னும் எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்.

சேரமான் பெருமான் நாயனார் சேரநாட்டு மன்னர்; சிவபூசையை வழாது செய்துவரும் பெற்றியர். அவரது பூசையின் முடிவில் ஒவ்வொரு நாளும் இறைவன் திருச்சிலம்பொலி கேட்டு மகிழ்வது அவரது வழக்கம். ஒரு நாள் தடைப்பட்டது ஏன்? தில்லையில்வந்து சுந்தரர் செந்தமிழ் பாட அப்பாடலில் எல்லையில்லாத அளவு ஈடுபட்டு விட்டார் ஆண்டவன். அதன் காரணமாகச் சிலம்பொலி கேட்பது சிறிது தடைப்பட்டது. ''வன்றொண்டன், ஒன்றும் உணர்வான் நமைப் போற்றியுரைசேர் பதிகம் பாடுதலான், இன்று கேட்டு வரத் தாழ்த்தோம்'' என்று ஆண்டவன் கூறியதாகப் பெரியபுராணம் பேசுகின்றது. இவ்வரலாற்றான் நம் ஆண்டவன் சுந்தரர் செந்தமிழைக் கேட்பதில் எவ்வளவு பற்றுக்கொண்டுள்ளார் என்பது புலனாகின்றது. சுந்தரமூர்த்திகளுக்காக ஆண்டவன் தோழனாக வந்து எத்தனையோ தொண்டுகளைச் செய்திருக்கின்றார் சுந்தரமூர்த்திகளைத் தடுத்தாட்கொண்டதுமன்றி பரவை பால் தூது நடந்தும் மனைகள்தோறும் சென்று இரந்துழன்றதும் எல்லாம் எதற்காக? சுந்தரர் செந்தமிழில் தாம் கொண்டுள்ள காதல் காரணமேதான். இதனை நாம் கூறவில்லை. சிவப்பிரகாசர் கூறுகின்றார். தாயுமானஅடிகளும், மூவர் தமிழின் சிறப்பியல்புகளை கீழ்வரும் பாடல் ஒன்றால் நன்கு விளக்குவதைக் காண்க.

தேவரெலாந் தொழச் சிவந்த
செந்தாண் முக்கட்
செங்கரும்பே! மொழிக்கு மொழி
தித்திப்பாக
மூவர் சொல்லுந் தமிழ் கேட்குந்
திருச்செவிக்கே
மூடனேன் புலம்பிய சொல் முற்றுமோ
தான்.

திருமுறைகள் எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் ஓர் தனிச் சிறப்புடையது. இரும்புதரு மனத்தையும் ஈர்த்தீர்த்து என்புருகிக் கரும்புதரு சுவையளிக்கும் கனிவு திருவாசகத்தி லிருப்பது போன்று வேறு ஒரு வாசகத்தினும் காண்பரிது. இத்தன்மை பற்றியே ''திருவாசகத்திற்குருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்ற பழமொழி ஏற்பட்டது. திருவாசகத்தின் சுவையை உள்ளவாறு சுவைத்தின்புற்றவர் இராமலிங்க அடிகள். அவரே அத் திருவாசகத்தின் பெருமை அளந்தறிய வல்லார். யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய நம்பிரான் மதுரை மாநகர் வந்து, குதிரைச் சேவகனாகி நரிபரியாக்கியும் மண் சுமந்தும், மாறன் பிரம்படி பட்டும் அல்லற்பட்டார். காரணம் திருவாசகம் கேட்கும் இச்சையாலே தான் என்று சிவப்பிரகாசர் கூறுகின்றார்.

இத்தகைய சிறப்புடைய திருமுறைகளை நாம் பெற்றிருப்பது உண்மையில் நமது நல் ஊழே. இதற்காக

நாம் பெருமைப்படுவதிலும் ஆச்சரிய மில்லை. ஆனால் நீண்ட நாளாக நாம் பெருமை பேசுவதிலேயே காலங் கழித்து விட்டோம். இன்று திருமுறை களின் பெருமைகளை உள்ளவாறு உணர்ந்தார்கள் எத்தனை பேர்? அவருள்ளும் எத்தனை பேர்கள் தம் வாழ்வில் திருமுறை நெறிகளை கைக் கொள்கின்றார்கள்? என்று கணக் கிட்டால் மிகவும் வருந்துவதைத் தவிர வேறு வழியில்லை. திருமுறைக ளுக்கு விழா எடுப்பதோடு நின்று விடாது திருமுறை காட்டும் வழியி லும் நாம் செல்ல முயற்சி செய்ய வேண்டும் திருமுறை நெறியே சைவப் பெரு நெறியாகும். அது காட்டும் நெறியே தமிழ் நெறி-திருநெறி-உயர் செந்நெறி எனலாம். அந்நெறி உல கெங்கும் பரவும் வகை செய்ய வேண் டுவது ஒவ்வொரு சைவப் பெருமக்க ளின் கடமையுமாகும்.

'' வாழ்க சைவத் திருநெறி!
ஓங்குக திருமுறை!''

---

★ ★

# நியந்த்ரீ

யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு அந்தண சமூகத்திடையே ஒரு சமூகமேம்பாடு ஏற்படுவதற்குரிய விழிப் புணர்வை உருவாக்கும் நோக்குடன், அந் தணர் சமூகத்திலே கல்விசார் உயர்நிலை யில் உள்ளவர்களால் 1997-03-09இல் இவ் வமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. ''நியந்த்ரீ'' என்பது ''யாவர்க்கும் வழிகாட்டுபவள்'' எனும் கருத்துடைய அன்னையின் திரு நாமமாகும்.

இன்று சிவாச்சார்யார்களின் மேன்மை இந்து சமயத்தின் தவிர்க்கமுடியாத தேவை யாக இருப்பதாலும், மேம்படுத்தப்பட்ட அந்தண சமூகத்தாலேயே அது நிவர்த்தி செய்யப்படக் கூடியதாகும் என இந்து சம யத்தினர் கருதுவதாலும், அந்தண சமூக மேம்பாட்டுக்குரிய தேவைகளை இனங் கண்டு நிவர்த்தி செய்வதுடன், சமய சமூகத் தொண்டுகளையும் ''நியந்த்ரீ'' முன் னின்று நடாத்தி வருகின்றது. இந்த வகை யில் அந்தண சிறார்களுக்கு சமஸ்கிருத, ஆலய கிரியை வகுப்புக்களை நடாத்தி வருகின்றது. வளர்ந்தோருக்கும் ஆலயக் கிரியைகள் பற்றி கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது. கிரியைகள் தொடர்பிலும், சமஸ்கிருதக் கல்வி தொடர்பிலும் நூல் களை வெளியிட்டு வருவதுடன், அப்படி யான நூல்களை வெளிட விரும்புவோர்க்கு அநுசரணையும் வழங்குகின்றது.

சமயம், சமூகம், கலாச்சாரம் தொடர் பிலும் நூல் வெளியிடுதல், கருத்தரங்குகள் நடாத்துதல், கண்காட்சிகள் நடாத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வரு கின்றது; பரீட்சையில் சித்தியடைந்த மாண வர்களைப் பாராட்டுதல், வசதியற்ற மாண வர்களுக்கு வசதிகள் செய்தல் போன்ற செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்படும் ''நியந்த்ரீ'' அமைப்பானது நிதி வசதி பெருகும்போது சமஸ்கிருத கலாசாலை அமைத்தல், ஆராய்ச்சிக்கூடம் அமைத்தல் போன்ற பணிகளிலும் தன்னை ஈடுபடுத்த உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**ந. சதாசிவ ஐயர், J. P.**

# இலங்கைப் பூர்வ குடிகளும் சிவவழிபாடும்

பேராசிரியர் அ. வேலுப்பிள்ளை அவர்கள்

*திருமூலர் திருமந்திரம் 2701ஆம் பாடலிலே இலங்கையைச் சிவபூமிக்குள் அடக்கியுள்ளார்.*

மேரு நடுநாடி மிக்கிடைபிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தன்மா மலயத்தூ
டேறுஞ் சுழுனை இவை சிவ பூமியே.

*தில்லைச்சிதம்பரத்துக்கும் பொதிகை மலைக்கும் இடைப்பட்ட தமிழகம் சிவபூமி என்றும் மேருமலைக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட பகுதி சிவபூமியென்றும் பெயருக்கு ஓரளவு உரிமையுடையதென்றும் கூறப்பட்டுள்ளது. பௌராணிக இலக்கியங்களுள்ளே பயின்று வரும் மேருமலை பூமியிலுள்ள எந்தமலையையும் குறிக்கின்றதா என்பது இன்னும் தெளிவாகவில்லை. சிவபுராணங்களிலே கைலாய மலைபற்றிப் பரவலான குறிப்புகள் இடம்பெறுகின்றன. இமய மலைக்கு வடக்கிலே திபெத்திலே கைலாயமலை அடையாளங் காணப்பட்டுள்ளது வங்காளத்துக்கு வடதிசையிலே கைலாயம் அமைந்துள்ளது. ஆகம வழிபாடு வங்காளத்தின் வட பகுதியிலேயே தோற்றம் பெற்றதாக இன்றைய ஆய்வாளர் கருதுகின்றனர்.*

*இலங்கையின் வரலாறு கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே பௌத்தமத வருகையுடன் தெளிவடைகின்றது. பௌத்தமதம் இன்றைய பீகார் மாநிலத்திலிருந்து இலங்கைக்கு வந்தது. அசோகப்பேரரசன் அனுப்பிய மகிந்தன் தலைமையிலான பௌத்த குருமார் ஆகாய மார்க்கமாக மிகுந்தலைக்கு வந்ததாக மகாவம்சம் கூறுகின்றது ஆகாய மார்க்கமாக வந்தனரென்பதை ஏற்க மறுக்கும் இன்றைய அறிஞர், தென்னிந்தியாவினூடாக அன்றி ஒரீஸ்ஸா, வங்காளம்என்னும் மாநிலங்களிலுள்ள துறைமுகங்களுடாக வந்திருக்க வேண்டும் என்று கொள்வர்.*

*மகாவம்மிசம் இலங்கைக்குச் சிங்களவர் வருகையை முந்நூறு ஆண்டுகள் முன்னெடுத்து செல்கின்றது. வங்காளம், ஒரிஸ்ஸா என்னும் மாநிலங்களிலுள்ள பகுதிகளிலேயே சிங்களவர்களின் முன்னோர் வாழ்ந்ததாகவும் விஜயனும் தோழர்களும் அப்பிரதேசத்திலிருந்து கடல்மார்க்கமாக இலங்கை வந்ததாகவும் கூறப்படுகின்றது. மகாவம்சத்தின்படி, விஜயன் இங்கு வந்தபோது, இலங்கையிலே நாகர்களும், இயக்கர்களும் வசித்தனர். கௌதம புத்தர் தம்முடைய மதத்தை இலங்கையிலே நிலைநிறுத்துவதற்காக மூன்று முறை ஆகாய மார்க்கமாக நேரிலே வந்தாரென்றும் இலங்கையின் மேற்குத் திசையிலுள்ளதும் இன்று களனி என்று சொல்லப்படுவதுமான கல்யாணிக்கு வந்த அவர் அண்மையிலிருந்த மலைச்சிக*

ரத்திலே தம்முடைய திருவடியின் அடையாளத்தைப் பொறித்துச் சென்றாரென்றும் கூறப்படுகின்றது. இலங்கையின் வடதிசையிலுள்ள நாகதீபத்துக்கு வந்த புத்தர் ஓர் இரத்தினச் சிம்மாசனம் தொடர்பாக நாக அரசர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைத்து அந்தச் சிம்மாசனத்தைத் தமக்குரிய புனித சின்னமாக்கினார். இலங்கையிலே மேற்குத்திசையிலும் வடமேற்குத்திசையிலும் நாகர் ஆதிக்கம் செலுத்தி வந்ததனால், நாகத்திசை என்ற பெயர் அத்திசைகளைக் குறிக்க வழங்கியதைச் சென்னைத்தமிழ்ப் பேரகராதி, யாழ்ப்பாணத்திலே தொகுக்கப்பட்ட அகராதிகளிலிருந்து எடுத்துக் காட்டுகின்றது.

கௌதம புத்தர் இயக்கர்கள் வாழ்ந்த மகியங்கனைப் பகுதிக்கும் வந்திருந்தார். இயக்கர்களிடம் எதிர்ப்பைக்கண்ட அவர், இயக்கர்களை அவ்விடத்திலிருந்து விரட்டி, தம்முடைய மதத்தை அவ்விடத்திலே நிலை நிறுத்தினாரென்று கூறப்படுகிறது. சிவவழிபாட்டுக்காரர்களாக இருந்த இயக்கர்கள் பௌத்தத்தை ஏற்கமறுத்திருக்கக் கூடும் என்று நம்ப இடமிருக்கிறது.

நாகர்கள், இயக்கர்கள் என்பவர் யார் என்பது பற்றி அறிஞர்களிடையே ஒருமைப்பாடு இன்னும் ஏற்படவில்லை. தென்னிந்தியாவிலே திராவிட இனப்பண்பாட்டோடு தொடர்புடைய பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்கள் இலங்கையில் பல பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. நாகர்களும் இயக்கர்களும் திராவிடர்களாக தமிழர்களாக இருக்க வேண்டும் என்ற கருதுகோள் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

இந்தியாவின் வடகீழ் எல்லைப்புறத்திலே நாகர்கள் என்ற மங்கோலியத் தொடர்புள்ள இனத்துக்கு நாகலாந்து என்று தனி மாநிலம் காணப்படுகின்றது. வரலாற்றுக்காலத்திற்கு முன்பும் வரலாற்றுக் காலத்திலும் நாகர்களைப் பற்றிய பல குறிப்புகள் இந்தியாவின் பல்வேறு பாகங்களிலிருந்தும் கிடைக்கின்றன. நாகமன்னர்கள் ஆரியமன்னர்களோடும், திராவிட மன்னர்களோடும் வேறுபாடு காட்டாது கலப்புக்களை ஏற்படுத்தி வந்துள்ளனர். சங்ககாலப் புலவர்களுள்ளே நாகர் என்று பெயருள்ளவர் சிலர் காணப்படுகின்றனர்.

பண்டைக்காலத் தமிழகத்திலே சேரநாடு என்று பெயர் பெற்றிருந்த பிரதேசத்தின் பெரும்பகுதியாக அமைந்து, இன்றும் தமிழோடு ஒப்புமைகள் பலவற்றைக் கொண்டுவிளங்கும் மலையாள மொழி வழங்கும் கேரளமாநிலத்திலே நாயர் என்னும் சமூகத்தினர் வாழ்கின்றனர். நாக பாம்பு வழிபாட்டின் எச்சசொச்சங்கள் அவர்களிடையே இன்றும் காணப்படுகின்றன. நாகர் என்ற சொல் நாயர் என்று திரிந்து வழங்குகின்றதெனக் கொள்ளலாம். கேரளமும் தமிழ்நாட்டுக்கு மேற்குத்திசையில் அமைந்திருக்கிறது. நாகர் வடகீழ் இந்தியாவிலிருந்து வந்தவர்களானால், பண்டைக்காலத் தமிழகத்திலும் பண்டைக்கால இலங்கையிலும் மேற்குத்திசையிலே குடியேறியது ஏன்? எப்படி? என்ற வினாக்கள் எழுகின்றன.

தமிழகத்தின் தென்மேற்கிலே நாகர்கோயில் என்ற துறைமுகமும் தென்கிழக்கிலே நாகபட்டினம் என்ற துறைமுகமும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக் கரையிலே நாகர்கோயில் என்றொரு துறை உண்டு. நாகதம்பிரான் வழிபாட்டுச் சின்னங்கள் வட இலங்கையிலே ஆங்காங்கு காணப்படுகின்றன. இலங்கையின் வடமேற்குத் திசையிலே பாடல்பெற்ற சிவத்தலமான திருக்கேதீச்சரம் காணப்படுகிறது. கேதுவழிபட்ட தலமாதலால் திருக்கேதீஸ்வரமென்ற பெயரேற்பட்டதாகக் கூறப்படுவது நாகர்கள் வழிபட்ட சிவத்தலம் என்பதையே குறிப்பதாக இருக்கவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாகபட்டினமும் இலங்கைக்குநாகர்கள் வந்த வழிகளா அல்லது இலங்கையிலிருந்த நாகர்கள் தமிழகத்துக்குச் சென்ற வழிகளா என்பது ஆராய்ச்சிக்கு உரியது.

கௌதமபுத்தர் காலத்திலேயே பௌத்த சமயத்தை விரும்பி ஏற்றுவிட்டார்களாகக் கூறப்படும்நாகர்கள் அநுராதபுரத்திலிருந்த சிங்கள மன்னர்கள் பௌத்தசமயத்தை ஏற்றுக்கொண்டதும் அவர்களுடன் நெருங்கிக் கலந்தனர். மகாவம்மிசம் குறிப்பிடும் சிங்கள மன்னர் வரிசையிலே, தேவநம்பிய தீசனின் தம்பியாக ஒரு நாகன் குறிப்பிடப்படுகின்றான். அவனுடைய தாய் நாகர் குலத்தவளாக இருந்திருக்க வேண்டும். கி. பி. இரண்டாம் நூற்றாண்டு நடுப்பகுதியிலிருந்து மூன்றாம் நூற்றாண்டு நடுப்பகுதி வரையிலே, மன்னர்கள் பலர் நாகர்களாக விளங்குவதைக் காணலாம். திருமணத் தொடர்புகள் மூலமாக, நாகர்குலத்தவர்கள் அநுராதபுரச் சிம்மாசனத்தைக் கைப்பற்றியிருந்தனர் என்றே இந்த நிலைமைக்கு விளக்கம் கொடுக்க வேண்டும்.

மகாவம்மிசம் முதலியபாளி நூல்களும் மணிமேகலை முதலிய தமிழ் நூல்களும் குறிப்பிடும் நாகத்தீவு அல்லது மணிபல்லவம் எது என்பது ஒரு காலத்திலே ஆராய்ச்சிக்குரிய விடயமாக இருந்தது. இன்றைய நயினாதீவே அந்த இடம் என்று ஒரு காலத்திலே கருதப்பட்டது. அதனால், அங்கே நாகதீவு விகாரைகட்டியெழுப்பப்பட்டு, அது சிங்கள பௌத்தர்களின் யாத்திரைத் தலமாக மாறியுள்ளது. 1936இல் வல்லிபுரத்திலே கண்டெடுக்கப்பட்ட பொன்னேட்டுச் சாசனம் யாழ்ப்பாணக்குடா நாடு முழுவதும் நாகத்தீவெனப் பெயர் பெற்றிருக்க வேண்டும் என்ற விளக்கத்தைத் தந்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாடு வரை, மாதோட்டம் உட்பட, இலங்கையின் வடமேற்குப் பிரதேசம் நாகர்கள் குடியிருப்பாக ஒரு காலத்திலே விளங்கியிருக்க வேண்டும். வரலாற்றுக் காலத்திலே, இலங்கையின் ஏனைய சில பகுதிகளிலும் தென்கீழ்த்திசையிலுள்ள மகாகமம், வட கீழ்த்திசையிலுள்ள கொட்டியாரம், மத்தியிலுள்ள மாத்தளை முதலிய இடங்களும் நாகர் குடியிருப்புக்களாக மாறின.

வரலாற்று ஆய்வுக்கு, இலக்கியச் சான்றுகளிலும் பார்க்க, சாதனைச் சான்றுகள் வலுமிக்கனவாகக்கொள்ளப்படுகின்றன. தமிழகத்துச் சங்க காலத்துக்குச் சமமான காலத்தைச் சேர்ந்தவனவா ஆதிப்பிரமிச்சாசனங்களிலே நாகர் அரசுகள் குறிப்பிடப்படும் இடங்களை நோக்க வேண்டும்.

நாகர்கள் நாடு முழுவதும் பரவி வாழ்ந்தமை அச்சாசனங்களிலேவரும் ஆட்பெயர்களிலிருந்து புலப்படுகிறது. வடமாகாணத்தின் தென்னெல்லையி லுள்ள வவுனியாவுக்கு அண்மையி லுள்ள பெரிய புளியங்குளத்துக் குகைச்சாசனங்களிலே நாகமன்னன் குறிப்பிடப்படுகிறான். நாகத்தீவிலி ருந்த மக்கள் வவுனியாவரை பரவி, அப்பிரதேசத்தில் அரச உரிமையும் பெற்றிருந்திருக்கின்றனர்.

வடமேற்கு மாகாணத்திலே, நாக மன்னர்கள் பற்றி இரண்டு சாச னங்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் ஒன்று பழைய பிராமிச்சாசனகாலத் தையும் மற்றது சிறிது பிந்திய காலத் தையும் சேர்ந்தது. இலங்கையிலுள்ள மிகப்பழைய சிவன் கோவில்களுள் ஒன்றாகக் கருதப்படும் முன்னேசுவரம் வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்தது. அநுராதபுர மாவட்டத்திலும் ஒரு சாச னம் நாகமன்னனைக் குறிப்பிடுகிறது. அந்தச்சாசனம் காணப்படும் இடம் வட மாகாண எல்லைக்கு அண்மையிலே, மேற்குத்திசையிலே அமைந்துள்ளது.

மத்திய மலைநாட்டிலே, கண்டி மாவட்டத்திலே, இருவேறு இடங்களி லுள்ள சாசனங்கள் ஒவ்வொன்றும் நாகமன்னரைக் குறிப்பிடுவது வியப் பாக உள்ளது. நாகமன்னர் ஆட்சி கண்டி மாவட்டத்திலே பரவியிருந்த மைக்கு இலக்கியச்சான்று கிடைக்க வில்லை. இச்சாசனங்கள் மட்டுமே சான்று பகருகின்றன.

வடக்குமாகாணம், வடமேற்கு மாகாணம், மத்தியமாகாணம் முத லிய பிரதேசங்களிலே நாக அரசு ஒன்றா பலவா, பலவானால் எத் தனை இருந்தன என்பதைத் தீர்மா னிக்கத் தேவையான சான்று இது வரை கிடைக்கவில்லை. நாக அரசு கிழக்கு இலங்கையிலும் தன்னுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள் ளமைக்குச் சான்று கிடைத்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குச லங்கந்தக் குகைச்சாசனத்திலும் அம் பாறை மாவட்டத்திலுள்ளமொட்டைக் கல்லுக்குகைச்சாசனத்திலும் நாக உபராசர்கள் குறிப்பிடுகின்றனர். யுவராசா என்ற வடசொல்லே உப ராசா என்று பாகத்திரிபு பெற்றுள் ளது. கிழக்கிலே இளமைப்பருவத்திலே இளவரசராக முடிசூடி அநுபவம் பெற்ற பின் வடக்கிலே முழு அரச ராகப் பதவி உயர்வு பெற்றுப்போகும் வழக்கம், நாக மன்னர்களுக்குள் இருந்திருக்குமாவென்பது ஆராயத் தக்கது.

நாகர்கள் இலங்கையின் வட கரையிலிருந்தும் மேற்குக்கரையிலி ருந்தும் சிறிது சிறிதாக இலங்கை முழுவதும் பரவியிருக்கின்றனரென் பது தெளிவாகத் தெரிகிறது. தமிழ் நாட்டுக் கடற்கரைக்கு எதிர்க்கடற் கரையிலே நாகர் குடியிருப்புகள் இலங்கையிலே அமைந்திருந்ததனால், இலங்கை நாகர்கள் தமிழர்களாக அல்லது தமிழர்களோடு உறவுகளை வளர்த்துக்கொண்டவர்களாகஇருக்க வேண்டும். இயக்கர்கள் என்போர் யார் என்பது இன்னும் சிக்கலான வினாவாகக் காணப்படுகிறது. மகா வம்சத்தின்படி இயக்கப்பெண் ணான குவேனியை மணம் முடித்த விஜயன், அவளின்உதவியுடன் இயக் கர்களைக் கொன்றொழித்து. இலங்கை மன்னன் ஆகின்றான்,

பின்பு குவேனியையும் இரண்டு பிள்ளைகளையும் காட்டுக்கு விரட்டி விடுகிறான். அப்பிள்ளைகளின் பரம்பரையே இன்றுள்ள வேடர்கள் என்று கூறப்படுகிறது. இது எவ்வாறாயினும் இயக்கர்களின் பரம்பரையில் வந்தவர்களே வேடர்கள் என்ற கருத்து இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது வேடர்களின் முன்னோர் நாகர்களுக்கும் முன்பு இலங்கைக்கு வந்தவர்களாக இருக்கவேண்டும். நாகர்கள் காலப்போக்கிலே தமது தனித்துவத்தை இழந்து, தமிழர் சிங்களவர் என்போருடன் இரண்டறக் கலந்துவிட்டனர். இயக்கரும் பெரும் பகுதியினர் இவ்வாறே மாறிவிட்டனர். இயக்கருள் ஒரு பகுதியினர் இன்றும் தமது தனித்துவத்தைப் பேணும் வேடராக வாழ்ந்து வருகின்றனர்.

''ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்''* என்னும் முன்னோடித்தமிழர் வரலாற்று நூலை எழுதிப் புகழ் கொண்ட கனகசபைப் பிள்ளை, இயக்கர்களும் மத்திய ஆசியாவிலிருந்து இமயமலையூடாக இந்தியாவுக்குட் புகுந்த மங்கோலியத் தொடர்புள்ள இனத்தவரேயென்பர். இவர்கள் ஒரு காலத்திலே ஆரியமயமாக்குதலைத் தீவிரமாக எதிர்த்து நின்றவர்களாக இருந்திருக்க வேண்டும். இராமாயணப்புகழ்பெற்ற இராவணன், இலங்கை இயக்கர்குல மன்னர் ஆவான். ஆரிய திராவிடப்பூசல் கூர்மையடைந்துள்ள நிலையிலே, தமிழ்நாட்டிலே, வடஇந்திய இராமனை எதிர்த்துப் போராடிய இராவணன் திராவிட மன்னனாகவும் தமிழ்மன்னனாகவும் போற்றப்படுவதைக் காணலாம். தமிழ்நாட்டு மக்கள் இராவணன் மேல் உரிமை பாராட்டுவது இருபதாம் நூற்றாண்டு நிகழ்ச்சியாகும்.

இயக்கர்களைக் கைலாயமலையோடு தொடர்புபடுத்தும் மரபு, அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வங்காளம் ஊடாக வந்தவர்களாகலாம் என்ற நம்பிக்கைக்கு ஆதாரமாகக்கூடும். இராவணனுடைய உறவினனும் மூத்தவனுமான குபேரன் இலங்கையரசை இராவணனுக்கு விட்டுவிட்டுக் கைலைக்குச் சென்றான் என்று கூறப்படுகின்றது. கைலாயநாதன் என்ற பெயர் சிவபெருமானை மட்டுமல்லாது குபேரனையும் குறிக்கின்றது. குபேரசைலம் என்பது கைலாயமலையே என்று அகராதி கூறும். இராவணன் கைலாயமலையைத் தூக்கிக்கொண்டு இலங்கைக்கு வர முயன்றான் எனப்படுகிறது. தன் இனத்தவர்களான இயக்கர்களுக்குக் கைலாய மலைமேல் இருந்த உரிமையையே அவன் நிலைநாட்ட முயன்றான் போலும்.

வங்காளத்தின் வடபகுதியே தாந்திரீக வழிபாடு அல்லது ஆகம வழிபாட்டு வளர்ப்புப்பண்ணை என்று கூறப்படுகிறது. கைலாயத்தைத்தலைமைத்தானமாகக் கொண்ட சைவாகம முறையிலான வழிபாடு வங்காளத்திலே காலத்தால் மிகப்பழையது. இராவணன் முதலிய இயக்கர் சிவ வழிபாட்டுக்காரர் என்பது இராமாயணத்திலே அழுத்திக் கூறப்பட்டுள்ளது. சைவசமய குரவர்களுள் முதல் இருவரான திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தங்களுடைய தேவாரப்பதிகங்களிலே இராவணனுக்குப்

பெருமுக்கியத்துவம் வழங்கியுள்ளனர். சிவசின்னமான திருநீற்றின் சிறப்புகளை வரிசைப்படுத்தும் சம்பந்தர் ''இராவணன் மேலது நீறு'' என்று கூறும்போது, மானிடப்பிறவியெடுத்தவர் எவருவே இவ்வாறு உயர்த்திக் கூறப்படவில்லை என்பது உற்றுக் கவனிக்கப்படவேண்டும்.

சைவசமய குரவர்களுள்நான்காமவரான மாணிக்கவாசகர் சிவபெருமான் மண்டோதரிக்கு அருள் செய்தமையைப் பாடியுள்ளார் இராவணன் தேவியான மண்டோதரி தேவதச்சன் மயனின் புதல்வியெனப்படுகிறாள். மாதோட்டமே மண்டோதரியின் சொந்த இடம் என்றொருகருத்து நிலவுகிறது. மகாதுவட்டா என்பவன் சிவபிரானை வழிபட்ட இடமே மாதோட்டமாகமருவியதென்ற கருத்து சிலராலே முன்வைக்கப்படுகிறது கம்மாளர்களுடைய குடியேற்ற நகராக மாதோட்டம் விளங்கியதென்ற கருத்தினை முதலியார் இராசநாயகம் முன்வைத்துள்ளார். நாகர்களும் ஒரு பிரிவினரே இந்தக் கம்மாளர் என்று அவர் கருதுகிறார். நாகர்களும் ஒரு காலத்திலே சிவ வழிபாட்டுக்காரராக இருந்துள்ளனர்.

வங்காளத்திலே சிவவழிபாட்டோடு குமார வழிபாடும் ஒரு காலத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கியது. குமார வழிபாடு தமிழகத்து முருகவழிபாட்டோடு இணைந்து நிற்பது வேடர்கள் இலங்கையில் முருக வழிபாட்டை ''குமர''க் கடவுளுக்கே நிகழ்த்துகின்றனர். கதிர்காமத்திலிருந்து முல்லைத்தீவு வரை, ''குமார'' வழிபாட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. கிழக்கிலங்கையிலுள்ள படைக்கோவில்கள் பல வேடராலேயே தொடக்கிவைக்கப்பட்டவையாக கூறப்படுகின்றன.

இலங்கையிலுள்ள ஆதிப் பிராமிச் சாசனங்கள் மக்கள் பௌத்தத்துக்கு மதம்மாறிய நிலையிலே தோன்றியவை. அச்சாசனங்களிலும்பெரும்பாலானவை பௌத்த குருமாரின் பெயர்களையும் அக்குருமாருக்கான குகைகளை ஏற்படுத்தியவரின் பெயர்களையும் கூறுகின்றன. பௌத்தம் பரவுவதற்கு முன்பு, மக்களிடையே வழங்கிய ஆட்பெயர்கள் அற்றுப்போகாத நிலை அது. ''சிவா'' என்ற பெயர் இலங்கை முழுவதும் பயின்று காணப்படுகின்றது. பௌத்தம் இலங்கைக்கு வரமுன்பு இலங்கை சிவபூமியாக விளங்கியிருக்க வேண்டும்.

இலங்கையெங்கும் சிவா என்ற பெயர் பயின்று காணப்பட்ட போதும் மிகவும் அதிகமாகப் பயின்று காணப்பட்ட பிரதேசம் இலங்கையின் தென்கீழ்த் திசையாகும். அம்பாந்தோட்டை மாவட்டத்திலே கதிர்காமத்தைச் சுற்றியுள்ள மகாகமப்பற்றிலேயே ''சிவா'' குமார'' முதலியபெயர்கள் செறிந்து காணப்படுகின்றன. தென்கீழ் இலங்கையிலுள்ள திருக்கோவிலுக்கு எதிரிலே கடலுக்குள் இராவணன் கோட்டை இருந்து அழிந்ததாக வரும் செவிவழிச் செய்தி இவ்விடம் நினைவு கூரத்தக்கது.

இலங்கையின் வடகிழக்குத்திசையில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டமும் இராவணனோடு தொடர்புபடுத்தப்படுகின்றது. கோணமலைக் குன்றை வாளால் வெட்டியவனென

வும் கன்னியா வெந்நீர் ஊற்றுகளை அமைத்தவனெனவும் கோணேசுவரத்தை வழிபட்டவனெனவும் இராவணன் கூறப்படுகிறான்.

திருகோணமலை முதல் திருகோவில் வரை இயக்கர் பூர்வகுடிகளாக வாழ்ந்த தென்கீழ்த்திசையிலே கிழக்குப் பகுதியில் அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது. கொக்கட்டிச்சோலை தான் தோன்றீசுவரர் கோவிலெனப் பெயர் பெற்ற மட்டக்களப்புப் பிரதேசத்திலே பிரசித்திபெற்ற சிவன்கோவிலிலே சிவன் கோவில் வழிபாடும் வேடர்களாலேயே தொடக்கி வைக்கப்பட்டதாக வித்துவான் வி. சீ. கந்தையா கூறுவர்.

இராவணன் முதலியோர் புலஸ்தியமுனிவர் பரம்பரையிலே வந்தவரென இராமாயணம் கூறும். சைவ சமயத்தவரான சோழப்பெருமன்னர் இலங்கையைக் கைப்பற்றியபோது, இராவணனை நினைவுகூரும் வகையிலே புலஸ்திய நகர் என்ற புதிய தலைநகரை அமைத்தனர். அதுவே பொலனறுவை என்று மருவியது.

★ ★ ★

## அருள்தர வேண்டும் அம்மா

### எடுப்பு

அருள் தர வேண்டுமம்மா / தாயே
அபயமுன் திருவடி மலரொளியே (அருள்)

### தொடுப்பு

திருவிழி மலர்திறந்து அருள்ஒளி நலங்கள் தரும்
பெருமாட்டி உந்தனருள் விழிகாட்டி எந்தனுக்கும் (அருள்)

### முடிப்பு

தெல்லியுமு கொடையிலருள் சுரந்திடும் என்தாயே
நல்லவழி காட்டியெமை தானணைக்கும் உத்தமியே
அல்லல்கெ டுத்தருளும் அருள்விழி காட்டுமம்மா
வல்லமையின் சக்திவடி வாயொளிரும் துர்க்கையம்மா (அருள்)

போதுமிந்த வாழ்வினிலே வந்ததுயர்க் காட்சிபல
போக்கியெமைக் காத்துநலம் தந்தவளே உந்தனது
புதுமைந லமருளும் பூத்தபுது மலரொளியே
புவிமீதில் எமையாளும் உழுகொழுடைப் பதியாளே (அருள்)

அருளொளி காட்டியருள் சிந்திந லம்படைக்கும்
ஆதியெ னையாளும் அன்னையுன் மலரடிகள்
இருகர மும்வணங்க இன்னருள் மழைசொரியும்
ஈசனருள நேசனிடப் பாகம மர்ந்தவளே

கவியாக்கம் :
இளங்கவி பாரதிபாலன் சு. குகதேவன்
தெல்லிப்பழை.

# மகா சிவராத்திரி மகிமை

**இணுவில் சோ. பரமசாமி, B. Sc. அவர்கள்**

### வியத்தகு வித்தகம்

பூவுளானுமப் பெருங்கடல் வண்ணனும்
புவியிடந் தெழுந் தோடி
மேவி நீடிநின் றடியினை காண்கிலா
வித்தகம் எண்ணாம் !

ஆம். முன்னொரு கால் இவ்வுலகிலே ஒரு வியத்தகு விந்தை நிகழ்ந்தது. அச் செய்தியை ஞானக் குழந்தையாகிய ஞானசம்பந்தர் திருக்கேதீச்சரத் திருப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். சிவபுண்ணியம் செய்து, இப் பிரபஞ்சத்தைப் படைத்தும் காத்தும் வந்தவர்கள், அயனும் அரியுமாவர். இருவரும் செயற்கருஞ் செயல்களைச் செய்து வந்தால், இவ்வுலகம் நிலைபெற்றிருப்பதற்குத் தாமே கர்த்தா என்று இறுமாந்தனர் அதனால் அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் முதன்மை பேசி முரண்பட்டனர். பேச்சு வலுப் பெற்றுச் சண்டையாய் மாறியது. செருக்குற்றவர்களின் சண்டையைத் தீர்க்கக்கருதிய சிவபெருமான், அவ்விருவருக்கும் நடுவே சோதிப் பிழம்பாய்த் தோன்றினார்.

முன்னொரு போதும் அவ்வாறான தோற்றத்தைக் காணாத இருவரும், அது எங்கு தொடங்கி எங்கே முடிகிறது என்பதை அறிய ஆவல் கொண்டனர். திருமால் வராக (பன்றி) வடிவங் கொண்டு சோதியின் அடியையும் பிரமா அன்ன வடிவங் கொண்டு முடியையும் தேடிச் சென்றனர்.

பிரமன் மால் காணப் பெரியோனை ஆணவச் செருக்குற்றோர் எங்கே காணப் போகிறார்கள்! அரியொடு பிரமற்கு அறியவொண்ணா மெய்யனின் சோதிப் பிழம்பைக் கண்டதும் —

'' போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியும் ஆதாரவதனில்
கடிமுர னேன மாகிமுன் கலந்து
ஏழ்தல முருவ விடந்துபின் னெய்த்து
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள் ''

எனத் திகைத்து நின்றனர் என்று திருவாசகம்—போற்றித் திருவகவலில் மணிவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

தேவருகிற் பெரும் பதவிகள் தாங்கி இருப்போர் மமதையுற்றுத் தமக்கு மேல் தலைவர் எவருமில்லை என்று இறுமாந்திருப்பது வேண்டாத செயல்.

பிரமாவின் மகனான தக்கன் நீண்ட நாள் கடும் தவம் செய்து கடவுளின் அருளைப் பெற்றான். தன்னிடம் எல்லா வல்லமையும் உண்டென்று செருக்கெய்தினான். அகிலலோக நாயகராகிய சிவபெருமானை மனதிலும் நினையாது, பெரிய எடுப்பில் யாகம் ஒன்று செய்யத் தொடங்கினான். அவனது அடாத செயலைக்கண்டு வெருண்ட வீரபத்திரர், அவனுடைய மானுடத் தலையை மாற்றி, ஆட்டுத் தலையைச் சுமக்கச் செய்தார். இவ்வரலாற்றைக் கந்த புராணத்தில் காணலாம்.

சிலர் தமது இலக்கை அடைந்ததும் நடந்து வந்த பாதையை மறந்து விடுவதுண்டு. அவ்வாறு தாழ்வானவை செய்து தலை தடுமாறுவோரை இம்மாநிலத்தில் எங்கும் காணலாம். அத்தகையோரின் செயல்களைக் கச்சியப்பர் கந்தபுராணத்தில் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளதைக் கற்றோர் அறிவர்.

அந்நோக்கில் பார்க்கும் பொழுது பன்னெடுங் காலம் பெருந் தவம் செய்த சூரன் அளக்கலாகா அருள் பெற்றான். ஆயிரத்தெட்டு அண்டங்களும் நூற்றெட்டு அக்குறோணி சேனைகளும் தன்னிடம் இருப்பதால், தன்னை யாருமே வெல்ல முடியாதென்று நெஞ்சை நிமிர்த்தினான். போர்க்களத்தில் குமாரக் கடவுளைக் கண்டபோது "நேற்றைப் பாலன்" என்று இகழ்ந்தான். அவனது அஞ்ஞானத்தை அறிந்த கந்தப் பெருமான் தனது திருப்பெரு வடிவத்தை அவன் முன்னே காட்டினார். சூரனைப் பீடித்த ஆணவம் அகன்றது.

**முருகனின் திருப்பெரு படலம் :**

பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு, ஓர் உருவம் தாங்கி கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு உலகம் உய்வதற்காக ஒரு திருமுருகனாய் வந்துள்ளான் என்பதைச் சூரன் உள்ளவாறு உணர்ந்தான்.

கந்தக் கடவுளின் அற்புதக் கோலத்தைக் கண்ட சூரன், அந்த அழகுத் தெய்வத்துக்கு ஆளாகி, அவன் அருளைப் பெறவும் துணிந்தான். மாயையின் வயிற்றில் பிறந்து சுக்கிராச்சாரியாரின் அவப் போதனையிற் சிக்குண்டிருந்ததால், அவனது நெஞ்சில், ஆழமாய்ப் பதிந்திருந்த மானம் அவனுடைய மனமாற்றத்தை ஒரு கணப் பொழுதில் தடுத்து விட்டது. ஈற்றிலே முருகனின் அம்புக்குச் சூரன் இலக்காகினான் எனக் கந்தபுராணம் செப்புகின்றது.

புராணம் என்பது பழைய கதை என்றும் வீண் புழுகு என்றும் சும்மா தள்ளி விடக் கூடாது. அது கூறும் செய்திகளை மனதிலே வாங்கிக் கொண்டு வாழ்வை அறநெறியில் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

**சிவராத்திரி வரலாறு :**

நெஞ்சம் தருக்குற்றிருந்த தக்கன், தனக்கு நேர்ந்த கதிக்கு விமோசனம் தேடித் தந்தையாகிய பிரமதேவனிடம் சென்றான். ஆணவத்தால் மானிடத் தலை நீக்கப்பட்டு ஆட்டுத் தலையைத் தக்கன் சுமக்க நேர்ந்தது என்பதை உணர்ந்த பிரமா, அன்றொரு நாள் அயனும் மாலும் தமக்கு நடுவில் தோன்றிய சோதிப்பிழம்பின் நிகழ்வைத் தக்கனுக்கு எடுத்துச்சொன்னார். சோதி வடிவின் அடியையும் முடியையும் தேடிச் சென்ற இருவருக்கும் ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுவதே கந்தபுராணம் தட்ஷ காண்டத்தில் வரும் அடிமுடி தேடிய படலாகும்.

" அரியும் யானுமுன் தேடுமவ் வனற்கிரி யலை
கிரியெனும்படி நின்றதால் அவ்வொளி ஒளர்ந்த
இரவதே சிவ ராத்திரி யாயின திறைவற்
பரவி யுய்ந்தனர் அன்னதோர் வைகலிற் பலரும் "

(கந்தபுராணம் — அடிமுடி தேடு படலம்)

**மகா சிவராத்திரி விரதம் :**

மாசி மாதம் கிருஷ்ணபட்ச (தேய்பிறைக் கால) சதுர்த்தசி (பதினான்காம் நாள்) திதியிலே நள்ளிரவு வேளையில் சிவபெருமான் அரியும் அயனும் காணச் சோதி வடிவாய்த் தோன்றினார். அத்தினமே மகா சிவராத்திரி எனக்கொள்வது மரபு.

இப்புண்ணிய தினத்தைச் சிவனுக்குரிய நாளெனக் கொண்டு, விரதம் அனுட்டிப்பது சிவனடியார்களின் வழக்கம். இவ்விரதம் சிவவிரதங்கள் எல்லாவற்றுள்ளும் மேலானது.

சிவராத்திரி விரதம் — நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி; மாதச் சிவராத்திரி, யோகசிவராத்திரி, மகா சிவராத்திரி என்று ஐவகைப்படும். ஆண்டிலுள்ள இருபத்து நான்கு சிவராத்திரிகளிலும் சிவபூசை செய்து விரதம் காப்பது நித்திய சிவராத்திரி ஆகும். தை மாதம் கிருஷ்ணபட்சப் பிரதமை முதல் பதின்மூன்று நாட்கள் வழிபடுவது பட்சசிவராத்திரி; மாசிமாத கிருஷ்ண பட்ச சதுர்த்தசி நள்ளிரவிலே இலிங்கோற்பவ காலம் வருமாயின், அது மகா சிவராத்திரி ஆகும். பங்குனி மாத கிருஷ்ண பட்ச முதல் திருதியை, சித்திரை மாத கிருஷ்ண அட்ட

கம் முதலியன மாத சிவராத்திரி என்றும் திங்கட்கிழமை முழுவதும் அமாவாசை கூடி இருந்தால், அந்நாள் யோக சிவராத்திரி என்றும் கைக்கொள்ளப்படுகிறது.

இந்த ஐவகைச் சிவராத்திரிகளுள் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரியே மகாசிவ ராத்திரி என்று விசேட நாளாக மதித்து விரதம் அனுட்டிப்பது சைவ சமயிகள் வழக்கம்.

**விரதம் அநுட்டிக்கும் முறை :**

சிவராத்திரி தினத்தில் உபவாசம் இருத்தல் உத்தமம்; நீரேனும் பாலேனும் பருகுதல் மத்திமம்; பழம் மற்றும் தோசை முதலிய பணிகாரம் உண்பது அதமம் என்றும் கருதப்படுகிறது.

இத்தினத்திலே இராத்திரி நான்கு யாமமும் நித்திரை விழித்திருத்தல் வேண்டும். அவ்வாறு விழித்திருக்க இயலாதவர் இலிங்கோற்பவ காலம் — வரையிலேனும் விழித்திருத்தல் வேண்டும். சிவராத்திரியிற் பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவ காலம் அதாவது நள்ளிரவு பன்னிரண்டு மணி வரையுமுள்ள காலம் நீங்கும் வரையிலேனும் நித்திரை விழித்து விரதம் காத்தல் நன்று.

**இலிங்கோற்பவர் தரிசனம் :**

சிவாலயங்களில் ஈஸ்வரனுடைய கருவறைக்குப் பின்புறம் உள்வீதியிலே மேற்கு நோக்கி அமைந்துள்ள கோட்டத்தில் இலிங்கோற்பவர் பிம்பம் இருப்பதைக்காணலாம்.

இலிங்கோற்பவ மூர்த்தி என்பது பரமசிவனுடைய அறுபத்து நான்கு மூர்த்தங்களுள் ஒன்று. சிவனுடைய உருவம் — மான் மழுவுடன் இருக்கின்றது; சிரசும் பாதமும் கண்களுக்குப் புலப்படா. கீழே வராக மூர்த்தி (பன்றி வடிவம் தாங்கிய திருமால்) காணப்படுகிறது. மேலே ஹம்ச மூர்த்தி (அன்ன வடிவம் தாங்கிய பிரமா) காணப்படுகிறது. ஆதியும் அந்தமும் இல்லாச்சோதி சொரூபமே இவ்விதம் இலிங்கோற்பவ மூர்த்தியாக நள்ளிரவில் விஸ்வரூபம் எடுத்துச் செருக்குற்ற பிரம விட்டுணு மூர்த்திகளின் ஆற்றல் பரம்பொருளின் முன் எதுவும் செல்லாது என்பதை உணரச்செய்த நிகழ்வாகும்.

சிவராத்திரி நாளில் நிகழ்ந்த அற்புதக் காட்சியைச் சிலையாக வடித்துக் காட்டுவதே இலிங்கோற்பவமூர்த்தி. ஆகவே சிவ ராத்திரி நாளில் சிவாலய தரிசனையுடன் இலிங்கோற்பவ தரிசனையும் இன்றியமையாததென்று சைவ சமயிகள் நம்புகின்றனர்.

**சிவராத்திரி விரதப் பேறு :**

மகா சிவராத்திரி நாளன்று நான்கு யாமமும் நித்திரை விழித்து விரதம் அனுட்டிப்போர் உயர்ந்த பேறுகளைப் பெறுவர் எனச் சிவராத்திரி புராணம் செப்புகிறது. உணவின்றி உயிர் காப்பதற்காக நான்கு யாமமும் விழித்திருப்போரும் சிவலோக பதவிகளைப் பெறுவர் என்ற தளராத நம்பிக்கை சைவ சமயிகளுக்கு உண்டு.

எனவே, சிவ விரதங்களுள் மாசி மாத மகாசிவராத்திரி விரதம் தலையாய விரதம் என்பதும் அவ்விரதத்தைச் சைவ சமயிகள் அனைவரும் பெரிதாக மதித்துச் சிவ வழிபாடு செய்வர் என்பதும் மனம்கொள்ளற்பாலன.


## அடுத்த இதழில் எதிர்பாருங்கள்

"மாதாஜி" எழுதும்

## "சிறுவர் கந்தபுராண அமுதம்"

தொடர்........

உ

# திருக்கேதீச்சர சிவாலயமும் மகா சிவராத்திரி விழாவும்

"மாதாஜி"

ஈழத்தில் பாடல்பெற்ற தலங்களில் திருக்கேதீச்சரமும் ஒன்றாகும். திருக்கேதீச்சர ஆலயம் மிகமிகப் பழமையானது என்பதைத் திருஞானசம்பந்தர் தேவாரமும் சுந்தரமூர்த்திநாயனார் தேவாரமும் சான்றுகளாக அமைந்துள்ளன. திருஞானசம்பந்தர் சுவாமிகள் காலம் கி. பி. 7ஆம் நூற்றாண்டாகும்.

திருக்கேதீச்சர ஆலயம் வேத காலத்திற்கு முந்தியது என்பதை இராகு கேது வரலாறுகள் மூலம் அறியக் கிடக்கின்றது. மோட்சத்தையும் பேரின்பத்தையும் தருவது மண்ணுலக சிவ வழிபாடாகும் என்பதனைத் திருவாதவூரடிகள் அருளிய 'புவனியிற் போய்ப் பிறவாமை நாள் நாம் போக்குகின்றோம் அவமே' என்ற அடிகள் மூலம் அறியக் கிடக்கின்றது.

அசுரரும் அமரரும் தேவாமிர்தம் எடுப்பதற்காகத் திருப்பாற்கடலைக் கடைந்த காலம் வேதகாலம். வேத காலம் என்பது தேவர்காலம். அதற்கு முன்பே ஈழத்து மன்னார் மாவட்ட மாந்தையில் திருக்கேதீச்சரம் அமைக்கப்பட்டது என்பதை ராகு கேது தவமிருந்து சாப விமோசனம் பெற்ற வரலாறு வலியுறுத்துகின்றது. அக்காலந் தொடக்கம் புனித தலமாகவும் சாப விமோசனம் நீக்குமிடமாகவும், கிரகப்பீடை நீக்கும் தலதீர்த்தமாகிய பாலாவி காணப்பட்டதெனலாம். இஃதிலிருந்து திருக்கேதீச்சரம் தோற்றப்பட்ட காலந் தொடக்கம் மகா சிவராத்திரி தினம் விசேடமாக அனுட்டிக்கப்பட்டு வருகின்றது.

திருக்கேதீச்சரம் இராவணன் காலத்திலும் சோழர்காலத்திலும் வழிபாட்டுத் தலமாகஇருந்தது இராவணனின் ஆட்சிப் பீடக் காலத்தில் மாந்தை தலைநகரமாக இருந்தது. வீணைக் கொடி பறந்தது. திருக்கேதீச்சரம் பல வீதிகள் கோபுரங்கள் உடைய மூர்த்தி, தலம், தீர்த்தம் உடையதாக இருந்தது.

சோழர் காலத்தில் மாந்தை புகழ் பெற்ற தலமாகக் காணப்பட்டது. புலிக் கொடி பறந்தது. கடல் கடந்து அராபியர் போன்ற வணிகர்கள் முத்து, நெல், இரத்தினம், நெடுந்தீவுக் குதிரைகள் பெறுவதற்காக வந்தனர். இதனால் மாந்தை இந்தியாவின் திருப்பெருந்துறையோ என்று கணிக்கும்படி மாந்தைத் துறைமுகம் காணப்பட்டது.

காலங்கள் உருண்டோடின. அந்நியரின் யின் வருகை ஏலம், கறுவா, மிளகு, கராம்பு முதலிய வாசனைச் சரக்குக்காக வந்தவர்கள், இலங்கையின் எழிலும் வருமானத்திலும் மயங்கி இலங்கையைத் தம் ஆட்சிக்குட்படுத்திய காலத்தில் 17ஆம் 18ஆம் நூற்றாண்டளவில் சைவசமய ஆலயங்கள் முற்றாக அழிக்கும் போது திருக்கேதீச்சரமும் முற்றாக அழிக்கப்பட்டது.

ஈழத்தின் சைவத் தமிழர் செய்த மாதவம் மீண்டும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், தவத்திரு சிவயோக சுவாமிகளின் ஆசியும், வாழ்த்தும் 1954 களில் ஆலயப் புனருத்தாரணம் செய்யப்பட்டது. மகா சிவராத்திரி தினமும் சிறப்பாக அனுட்டிக்கப்பட்டது.

காலம் செல்ல செல்ல திருக்கேதீச்சர ஆலயப் பொலிவு மகோன்தமாகக் காணப்பட்டது சிவபெருமான் ஞானகுருவாக வந்து வாதவூரடிகளை தடுத்தாட்கொண்டு ஞான உபதேசம் அளித்த திருபெருந்துறைக் காட்சி

போன்று திருக்கேதீஸ்வரம் காணப்பட்டது. சுந்தரமூர்த்திநாயனார், திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் திருக்கேதீச்சரப் பதிகத்தில் பாடிய செய்திகளின் பிரதிபலிப்பில் ஒரு சில காணப்பட்டன. எம்பெருமானின் ஆனந்தக் தாண்டவக் காட்சி ஆலயச் சூழ் நிலைக்காட்சி, அலைகடல் ஓசையின் காட்சி ஆலய மகோற்சவ காட்சி சிவராத்திரி, திருவெம்பாவைக் காட்சிகளை வர்ணிக்க பக்திநதி பாலாவியுடன் மயங்கி எப்பெருமானின் மகாலிங்கம் மீது பல்லாயிரக்கணக்கான குடநீராகச் சொரிந்து கொண்டே இருக்கும். மயில்கள் ஆட, மந்தி குழவு கொட்ட, மான்கள் துள்ள, பசுக்களின் முலைகள் தாமாக பால், தயிர் சொரிய மாங்கனியின் சாறும் தேனும் மயங்க பக்த கோடி மக்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய எப்படி வர்ணிப்பது.

சிவராத்திரி சிவனுக்குரியது. மாசிமாத அமாவாசைத் தினத்தன்று பஞ்சாட்சரமாகிய திருவைத்தெழுத்தோதி ஆகம ஆசாரத்துடன் திருக்கேதீச்சரத்தில் கண்விழிக்க இலங்கையின் மூலை முடுக்குகளில் உள்ள பசுக்கள் ஒன்று கூடுவர். நாடும் வீடும் சிறக்க சைவம் தழைக்க சிவராத்திரித் தினம் திருக்கேதீச்சரம் சிவலோகத்தை விட விஞ்சிக் காணப்படும்.

இன்று 1991இல் — 2002 வரை திருக்கேதீச்சர நிலை நேர் நோக்கியோரின் நிலை கண்ணப்பநாயனார் எம்பெருமானின் கண்ணில் குருதி பாய்ந்த காலத்தில் கண்ணப்பர் பட்ட மீளாத்துயரை விட விஞ்சியதாகும் திருக்கேதீச்சர ஆலயத்தில் வீழ்ந்து மண்ணிலே புரண்டு கோவென்று அழவேண்டும் என்ற நிலையேயாகும். மணிவாசகப் பெருமான், சிவபெருமான் கூலியாளாய் வந்து மண்சுமந்து அடிபட்ட போது வைகை யாற்றங் கரையில் கண்ணீர் பெருக வீழ்ந்து புரண்டழுத நிலைதான் நினைவு வருகின்றது. சுற்றிவர இருந்த மடங்களில்லை. பசுக்கூட்டம், மயில்கூட்டம், மான்கூட்டம் குடிமனை நெருக்கம் ஏதுமின்றி எம்பெருமானின் கோபுரம் வானத்தையும் கடலலையையும் நோக்க 2002ஆம் ஆண்டு சிவராத்திரி விழா நடந்தது. சனக்கூட்ட நெருசல் கடைகள் அதிகம், அதிகம். ஆனால் எம்பெருமானுக்கு, சிவலிங்கத்திற்கு அபிடேகம் முதலியன இல்லை. இனிவருங் காலம் மீண்டும் திருக்கேதீச்சரத் சிவராத்திரி விழா கண்விழிப்பு புத்துயிர் புதுப்பொலிவுக்கான இலங்கை வாழ் சைவத் தமிழர் மனப்பூர்வமான ஒத்துழைப்பும், முந்கரண சுத்தியுடைய விசுவாசமான பக்தி வெள்ளம் பாயும் நவமும் கைகூட வேண்டும். ஆன்மீகம் ஆலயத்தை வளர்க்கட்டும்.

★ ★ ★

## திருக்கேதீஸ்வரப் பதிகம்

பாடல் வீணையர் பல பல சரிதைய ரெருதுளகத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது விருவகடற் கரையினி லெழிறிகழ் மாதோட்டங்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே. — சம்பந்தர்

*திருக்கேதீஸ்வரநாதர் பாடுகின்ற வீணையை உடையவரும் பல பல ஒழுக்கத்தை உடையவரும் ஆவார். தரும தேவதையாகிய இடப வாகனத்தைச் செலுத்திப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கின்ற ஐந்தொழிலாகிய அரிய நடனத்தை விரும்புகின்றவர் இவர். தேவர்கள் முறையிட நஞ்சை உண்டு இருண்ட கண்டத்தையுடையவருமாகியவர் சிவபெருமான். இவருடைய இடமாவது பெரும் கடற்கரையிற் பொருந்திய அழகு விளங்குகின்ற மாதோட்டத்திலுள்ள கேடில்லாத திருக்கேதீச்சரம் என்கின்ற திருத்தலமாகும். இத்தகைய பெருமையுடைய இறைவனை வணங்கி எழ வருத்தத்தைச் செய்கின்ற தீவினைகள் அனைத்தும் கெட்டுவிடும் என்கிறார். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.*



சமயச் சிறுகதை

# பிள்ளையார் சிரித்தார்

திரு. மயூரன் அவர்கள்

''நாம் கிளம்புவோமா?'' முத்து கூப்பிட்டான்' ''அதற்குள்ளேயா?'' மாணிக்கத்தின் குரலில்வியப்புதெரிந்தது,

''ஆமாம். இப்பவே கிளம்பினால் தான் இருட்டுவதற்குள்ளே திரும்பலாம்.''

இருவரும் இரண்டு கூடைகளை எடுத்துக்கொண்டு கிளம்பினார்கள். ''பிள்ளையாரைக் கும்பிட்டு விட்டுப் போகலாம்'' என்றான் மாணிக்கம். தெருக்கோடியிலிருந்த பிள்ளையார் கோவிலுக்குப் போய்ப் பிள்ளையாரைச் சுற்றி வந்தார்கள். விழுந்து வணங்கி விட்டு, 'எங்கள் முயற்சி வெற்றி தரவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார்கள்.

முத்துவும் மாணிக்கமும் நண்பர்கள். இரண்டுபேருமே கூலி வேலை செய்பவர்கள் முத்துவுக்கு அப்பா இல்லை. மாணிக்கத்தின்அப்பா ஏதோ தொழிற்சாலையில் வேலை பார்க்கிறார். மாணிக்கத்திற்கு அவ்வப்போது முத்துதான் யோசனை சொல்வான். இருவரும் சேர்ந்து செயல்படுவார்கள்.

அப்படித்தான் ஒரு நாள் மாணிக்கத்தின் வீட்டிற்கு முத்து வந்தான்.

''மாணிக்கம், அடுத்த வாரம் விநாயகர் சதுர்த்தி வருகிறது. ரெயில்வே கடவையைத் தாண்டியுள்ள குளத்திலே நிறையக் களிமண் கிடைக்கும். எடுத்து வந்து பிள்ளையார்பொம்மைசெய்தால் நிறைய விற்பனையாகும்'' என்றான்.

''எனக்குப் பிள்ளையார் பொம்மை செய்யத் தெரியாதே'' என்று சிரித்தான் மாணிக்கம்.

''எனக்கும் தான் தெரியாது. உங்க அப்பாவிடம் சொல்லி, தொழிற்சாலையில் ஒரு பிள்ளையார் அச்சு தயார் செஞ்சு கொடுக்கச் சொல்லேன்...''

முத்துவின் யோசனை மாணிக்கத்தின் அப்பாவிற்குச் சரியாகப்பட்டது. இரண்டே நாட்களில் அச்சு தயாராகி விட்டது. நண்பர்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அடிக்கடி கூடிக் கூடிப் பேசிக் கொண்டார்கள். முத்து எங்கேயோ போய்க் குண்டுமணிகளைச் சேகரித்து வந்தான். எருக்கம் பூ மாலைகளுக்கு ஏற்பாடு செய்தான் மாணிக்கம்.

நண்பர்கள் இருவரும் இரண்டு கூடைகளில் மண்ணைச் சுமந்து வந்து பிள்ளையார் கோவிலில்

கொட்டினார்கள். நல்ல கனம். வெளியில் புழுக்கம் வேறு உடலெல்லாம் வியர்த்து விட்டது. 'இப்பொழுதே பொம்மை செய்ய ஆரம்பிக்கணுமா? என்று கேட்டான் மாணிக்கம்.

'வேண்டாம் இன்னொரு நடை மண் கொண்டு வந்து கொட்டி விடலாம். பொழுது விடிந்து பிள்ளையார் பொம்மை செய்ய ஆரம்பிக்கலாம்.

மாணிக்கம் கூடையை எடுத்துக் கொண்டான். இரண்டாம் நடை மண் கொண்டு வந்து கொட்டிய போது இருட்டி விட்டது. 'நான் இங்கேயே படுத்துக் கொள்கிறேன். நீ வீட்டுக்குப் போ. விடியற் காலையில் வந்து விடு' என்றான் முத்து.

'உனக்கு அபார மூளை! பெரிய தொழில் மேதையாக இருக்க வேண்டியவன் நீ' எனப் பாராட்டி விட்டு விடைபெற்றுக் கொண்டான் மாணிக்கம்.

முத்துவுக்குத் தூக்கமே வரவில்லை எழுந்து உட்கார்ந்து கொண்டான், கோவிலின் மங்கலான அகல் ஒளியில் ஈரக்களி மண்ணும் அதன் அருகில் அச்சும் பளபளத்தன. மாணிக்கம் சொன்ன புகழ் வார்த்தைகள் வேறு மனத்தை அரித்துக்கொண்டிருந்தன. 'உண்மைதான் அவனிடம் கொஞ்சம் பணம் இருந்திருந்தால் தன் செலவிலேயே ஒரு அச்சு தயாரித்து, வியாபாரம் செய்து, முழு லாபத்தையும் அவனே அடைந்திருப்பான். இப்போது அநாவசியமாக மாணிக்கத்திற்கு வேறு பங்கு கொடுக்க வேண்டும். அச்சு அவனிடம் இருப்பதால் இனி ஒவ்வொரு ஆண்டும் அவனோடு கூட்டுச்சேர்ந்துதான் வியாபாரம் செய்ய வேண்டியிருக்கும். நினைக்க நினைக்க மனம் கனத்தது.

திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது. தூக்கம் தான் வரவில்லை. இரவோடு இரவாகக் கொஞ்சம் பொம்மைகளைத் தயார் செய்து கொண்டுவிட்டால்? காலையில் கூட்டம் அதிகம் வந்து விடும். ஒவ்வொரு பொம்மையாகத் தயார் செய்து கொடுக்க மிகவும் தாமதமாகும். அந்தச் சமயம் தன்னிடம் முன்பே தயாராக இருக்கும் பொம்மைகளை ஜனங்கள் வாங்கிக் கொண்டு போய் விடுவார்கள் நிச்சயம் மாணிக்கத்தை விட அவனுக்குத்தான் நிறைய வியாபாரம் நடக்கும். முதலில் கொஞ்சம் தயங்கினான். 'இது நண்பனை ஏமாற்றுவது போல் ஆகிவிடாதா?' என்று. ஆனால் அவன் உள்ளத்தில் இருந்த வெறி அதையெல்லாம் மறைத்து விட்டது.

உடனே தன் எண்ணத்தைச் செயலாற்றுவதில் விரைந்தான். பிள்ளையார் அவனைப் பார்த்துப் பரிகாசமாக சிரிப்பது போலிருந்தது. தலையைத் திருப்பிக்கொண்டான். கைகள் சுறுசுறுப்பாக இயங்கின. கிடுகிடு வென்று பிள்ளையார் பொம்மைகள் தயாராகின. ஒரு கூடை நிறைய பொம்மை செய்து தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு போய்ச் சற்றுத் தள்ளியிருந்த ஆலமரத்தடியில் வைத்து விட்டு வந்தான். அச்சைக் கழுவிச் சுத்தமாகக் கொண்டு வந்து வைத்த போது மனத்தை விட்டு ஒரு பளு குறைந்த மாதிரி இருந்தது. இப்போதுதான் களைப்பு தெரிந்தது.

கையும் காலும் சோர்ந்து போய் அப்படியே கோவிலுக்குள்ளேயே படுத்துக் கொண்டு விட்டான்.

அவன் திடீரென்று விழித்துக் கொண்ட போது இடி இடித்தது. பேய் மழை பெய்து கொண்டிருந்தது; எவ்வளவு நேரமாகப் பெய்கிறதோ? முத்து திடுக்கிட்டுப் போய் ஆலமரத்தை நோக்கி ஓடினான். கூடையிலிருந்த பிள்ளையார் கரைந்து மண்ணாக ஓடிக் கொண்டிருந்தார்! தன் கெட்ட எண்ணத்திற்குத் தக்க தண்டனை கிடைத்து விட்டது என்பதைப் புரிந்து கொண்டான் முத்து.

வெற்றுக் கூடையைத் தூக்கிக் கொண்டு கோவிலுக்குத் திரும்பிய போது, கையில் குடையுடன் அரிக்கேன் விளக்கு சகிதமாக மாணிக்கம் வந்து கொண்டிருந்தான்.

''முத்து காலையிலும் மழை இருக்கும் ... கடையைக் கோவிலிலேயே வைத்துக் கொள்ளலாம்'' என்றான் மாணிக்கம்.

இரண்டு பேரும் சேர்ந்தே வியாபாரம் செய்வோம் என்றான் முத்து.

'அச்சு செய்வதற்கு ஆன காசை மட்டும் எடுத்துக் கொண்டு மீதிப் பணம் பூராவையும் அச்சையும் உன்னிடம் கொடுத்து அனுப்பவும் என்று அப்பாகிட்டே சொன்னேன். அவரும் அதுதான் சரின்னு சொன்னாரு' என்றான் மாணிக்கம்.

முத்துவின் கண்களில் நீர் துளித்தது. இந்தத் தூய்மையான நண்பனையா அவன் ஏமாற்ற நினைத்தான்? அப்படியே மாணிக்கத்தைக் கட்டித் தழுவிக் கொண்டான். 'இனி நாம் எது செய்தாலும் இணைந்தே செய்வோம். லாபத்தைப் பகிர்ந்து கொள்வோம்' என்றான். நண்பர்கள் இருவரும் மகிழ்ச்சியால் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பில் பிள்ளையாரும் கலந்து கொண்டார்.

---

★ ★ ★


## ''அருள் ஒளி'' வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

''அருள் ஒளி'' மாதம் தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இம்மலருக்கு பொருத்தமான, தரமான, ஆக்கங்களை நாம் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி,

ஆசிரியர்
''அருள் ஒளி''
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆசிரியர்
''அருள் ஒளி''
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.